743

ஐந்தமிழ்

தொகுதி : பகுதி-2

1976

JL
031 m211, N23 PY
N23.1.2
144020.

14020

உ

கடவுள் துணை.

# "பைந்தமிழ்"

143

| தொகுதி | துந்துபி௵ மாசி௴ | பகுதி |
| --- | --- | --- |
| 1 | 1923௵ பிப்ரவரி௴ | 2 |

பொருளடக்கம்.

FEB 1923

| | | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | கடவுள் வணக்கம் ... | 53 |
| 2. | பைந்தமிழ் வாழ்த்துப்பாக்கள் ... ... | 54 |
| 3 | ஒரு வார்த்தை ... ... | 55 |
| 4. | செந்தமிழ் சிந்தை சிவ சிந்தை[illegible] ... | 57 |
| 5. | கருமியின் அருகதி ... ... ... | 59 |
| 6. | ஜீவன்-ஞானம் ... ... ... | 62 |
| 7. | பெண் கல்வி ... ... ... | 65 |
| 8. | வேதாந்த வசனம் ... ... ... | 68 |
| 9. | அரசியின் அந்தரங்கம் ... ... | 71 |
| 10. | ஸ்ரீ மகாவிஷ்ணுக் கீர்த்தனம் ... ... | 75 |
| 11. | ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸ் ... ... | 76 |
| 12. | நல்லினஞ் சேர்தல் ... ... ... | 79 |
| 13. | ஸ்திரீகளுக்கான பக்கம் ... ... | 82 |
| 14. | [illegible]சயக்கணக்கு ... ... ... | 84 |
| 15. | பிரகிருதி ஆராய்ச்சி விளக்கம் ... ... | 85 |
| 16. | பஞ்சாங்கம் ... ... ... | 87 |

K. JAGADISAN B.A., EDITOR.

## கவனியுங்கள்! கவனியுங்கள்!!

எந்நாளும் விலை அதிகரித்துக்கொண்டுவரும் அதி உயர்ந்த ஜர்மன் வைரங்கள், விந்தடிக் வைரங்கள், பச்சை, நீலம், முதலிய கற்கள் எவ்வித நகைகளுக்கும் உபயோகிக்கக்கூடியது. நாங்கள் விலை சரஸமாய்க் கொடுக்கிறோம். சொக்கத் தங்கத்தால் இழைக்கப்பட்ட மூக்குத்திகள் பேசரிகள், மோதிரங்கள், கடுக்கன்கள், கம்மல்கள், அட்டிகைகள், காப்புகள் முதலிய சகல நகைகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒரு முறை பரீக்ஷியுங்கள். கேட்லாக்கு வேண்டியவர்களுக்கு அனுப்புவோம்.

**ஜி. பி. ராமன் அண்டு கோ.**
69. நாராயண முதலி தெருவு,
சென்னை.

**G. B. RAMAN & Co.,**
**69. Narayana Mudali Street,**
**MADRAS.**


கடவுள் துணை.

# "பைந்தமிழ்"

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு—திருக்குறள்.


| தொகுதி 1 | துந்துபி௵ மாசி௴ 1923௵ பிப்ரவரி௴ | பகுதி 2 |
|---|---|---|


## கடவுள் வணக்கம்.

### விநாயகர்.

"சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே."

### ஆறுமுக நாயனார்.

"ஆறுமணி மவுலியுங்கண் ணீராறுங் குழைகளீ ராறும் பால
மாறுநற் பவளவா யாறுமா றுவெழுத் தாறுமாறே
ஞாயிறீர் ருண்டமுந்தோ ளீராறுங் கரங்களீ ராறுஞ்சோதி
யாறுவத னமுந்தொழுவோ ராறுத பிறவியினைப் பாறு வாரே.

---

ஊரனந் தம்பெற்ற பேரனந் தஞ்சுற்று
முறவனந் தம்வினையினால்
உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
தோவனந் தம்பெற்றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நகரமு மனந்தநற்
றெய்வமு மனந்தபேதம்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னான்ஞான
சிற்சத்தி யாலுணர்ந்து

கற்பக நூலகம்



கா[illegible]னுந் தங்கோடி வருஷித்த தெனவன்பர்
[illegible]ணும்விண் ணுந்தேக்கவே
க[illegible]ய வானந்த மழைபொழியு முகிலைநங்
[illegible]டவுளைத் துரியவடிவைப்
பேரானந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தின்வைப்பை
பேசருமனந்தபத ஞானவா னந்தமாம்
பெரியபொருளைப்பணிகுவாம்.

ஐயனே போற்றி போற்றி யனகனே போற்றி யெட்டுக்
கையனே போற்றி கால காலனே போற்றி சோதி
மெய்யனே போற்றி போற்றி விமலனே போற்றி பொய்யர்
பொய்யனே போற்றி போற்றி புண்ணியப் பொருளே போற்றி.
ஆறணி சடையாய் போற்றி யடியவர்க் கெளியாய் போற்றி,
ஏறணி கொடியாய் போற்றி யிருவினை தவிர்ப்பாய் போற்றி,
வீறணியரவா போற்றி வேலவன் குரவா போற்றி,
நீறணி யமலா போற்றி நின்மலா போற்றி போற்றி.

---

# பைந்தமிழின்

## வாழ்த்துப்பாக்கள்.

### 1. வெண்பா.

செல்வமிகு சென்னைத் திருவல்லிக் கேணியிலே
சொல்வளஞ்சேர் பைந்தமிழாந் தொல்லூற்ற—நல்லுலகில்
வாழுமுயிர்க் கெல்லா மனங்குளிர ஊறியதான்
வாழிநெஞ்சே மற்றதனை வாழ்த்து.

### 2. விருத்தம்.

நந்தமிழு நந்நாடு நலம்பெறவே நாவலர்க ளுளு நாளுங்
கொந்தவிழுங் கொன்றையணி குழகனடி தனைப்பணிந்த குறிப்பைக் கண்டு
செந்தமிழோன் றளித்தந்தச் சேகதீசன் றிங்கடொறுஞ் சிறப்புற் றோங்கப்
பைந்தமிழுந் தரவந்த பான்மையினா லவனருளும் பல்லாண் டம்மா.



### 3. அகவல்.

தேனமர் கொன்றைத் திருமுடி மிசையொரு
பானில வணிந்த பரமனுங் குமரனுங்
கழகமோ டமர்ந்து கணித்த பைந்தமிழ்
ஆரிய மறிந்த வகத்தியன் றன்னை
முக்கட் பரமன் றெட்கட் செல்கெனச்
செந்தமி ழுணர்ந்தத் திருவொடுந் திகழுந்
தென்பாற் சென்றவர் தம்பாற் பயிலப்
பைந்தமிழ் பயிற்றெனப் பயின்றுவந் தந்தக்
குடமுனி வாழ்த்திய திடமிகு பைந்தமிழ்
ஒல்காப் பெருஞ்சீர்த் தொல்காப் பியமுனி
தன்பே ரிலக்கணந் தரப்பெறு பைந்தமிழ்
பரணனுங் கபிலனும் பார்புகழ் கீரனுந்
தெள்ளியோர் துதிக்கும் வள்ளுவ தேவருந்
தெய்வரும் புகழு மௌவையு மாட்டியுங்
கம்பருங் கூத்தரும் வெண்பா வேந்தரும்
ஏனைய புலவரு மேத்திய பைந்தமிழ்
நால்வரும் பாடிய நன்மைசேர் பைந்தமிழ்
உலகெலாம் விரும்பு மொள்ளிய பைந்தமிழ்
வாழி நீடூழி வாழி
வாழி நீடூழி வாழி வாழியவே.

மு. தண்டாயுதபாணிக்காடவராயர்,
தமிழ்ப்பண்டிதர்
விண்ணமங்கலம், குற்றாலம்.

# ஒரு வார்த்தை

தமிழணங்கின் அருமை மக்களே!

நமது பைந்தமிழின் ஒரு பகுதி வெளி வந்து இப்போது இரண்டாம் சஞ்சிகையும் வெளியுலாவ ஆரம்பித்தது. நீங்கள் எல்லோரும் இப்பத்திரிகையின் நோக்கத்தையும் கோரிக்கையையும் அறிந்திருக்கலாம். பொதுவாய் பத்திரிகைகளின் அவசியத்தைப்பற்றி மறுபடியும் இங்கு விரித்துக்கூறுதல் அனாவசியமே. ஆயினும் ஒன்றிரண்டு வார்த்தைகள் இங்குரைப்பது எமது கடமையாகும். இப்போது நமது இந்திய நாட்டுத்தமிழ் மக்களின் வாழ்வை

மனதிற்கொண்டுவாருங்கள். முன்னேற்றமடைந்த எல்லா தேசங்களிலுள்ள பாஷைகளைப்பேசும் ஜனங்கள் அவரவர்கள் பாஷைகளில் எவ்வளவு தேர்ச்சியடைந்திருக்கிறார்களென்றும் அதே யளவாவது நமது தமிழ்நாட்டு மக்கள் தமிழில் தேர்ச்சியுள்ளவர்களாயிருக்கிறார்களாவென்றும் நாம் கவனிக்கவேணும். ஒத்துப்பார்க்குமிடத்து தமிழில் பயிற்சியடைந்த தமிழ்ச்சகோதர சகோதரிகள் வெகுசொல்பமாயிருக்கிறார்கள். சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, தமிழ்ப்பாஷை யுன்னதநிலைமை யடைந்திருந்த தமிழ்நாட்டில் இன்றுகூட பல தமிழ் சகோதரிகள் தமிழ்த்தேர்ச்சி யில்லாதிருப்பது அந்தோ! மிகவும் அவமானத்துக் கிடமாயிருக்கிறது. நாம் இப்போது காரணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வது மிக அனுவசியமான விஷயம். தமிழ் நாட்டில் பல ஆண் பெண்கள் தமிழ்க் கல்வியில்லாதும் தங்கள் கையெழுத்துக்கூடப் போடத்தெரியாமலுமிருக்கிறார்களென்பது யாவரு மறிந்த விஷயம். கொஞ்சம் தமிழ்க்கல்வியடைந்த ஆடவர்கள் ஆங்கிலேயப் படிப்பை ஜீவனவிர்த்தியின் பொருட்டு கைக்கொண்டு தமிழை ஆதரிக்காது முக்கால் பங்கு இங்கிலீஷிலும் கால்பங்கு தமிழுமாய்க் கலந்து பேசுகிறார்கள். அதல்லாமல் தமிழ் எழுத்தறிந்த பெண்டிர்களோ சிறுபிராயத்தில் கற்ற எழுத்தையும் க்ரகஸ்தாச்ரமம் வந்தவுடன் மறந்து தங்கள் வேலையைப்பார்த்தும் வேலையற்ற நேரங்களில் வம்பாலும் வீண்பேச்சாலும் காலங்கழிக்கிறார்கள். நாகரீகமென்பது தமிழ் அபிவிர்த்தியை நசிக்கச்செய்வது பொருளெனப்படும்படி நடந்து வரும் காலமாயிருக்கிறது. அவர்கள் வீட்டிலேயே இருந்துகொண்டும் தங்கள் வேலையற்ற நேரங்களில் பற்பல விஷயங்களை படித்தறிந்து தங்களது புத்தியை விசாலமாக்கிக்கொள்ளவேணுமென்ற எண்ணமே அதிகமாய் இருப்பதற் கிடமில்லாமற் போய்விட்டதென்று சொல்லுதல் மிகையாகாது. ஓரே விஷயத்தைப் பற்றி வெகுகாலம் படித்தலைவிட சிற்சில விஷயங்களில் கொஞ்சம் கொஞ்சமாய் படித்து தேர்ச்சியடைவது நல்லதன்றோ? சிற்சில முக்கிய விஷயங்களை கொஞ்சம் கொஞ்சமாய் வெளியிட்டு அறிவை பரவச்செய்து விர்த்தியாக்குவது பத்திரிகைகளன்றோ? உதாரணமாக வேத சாஸ்திரமொன்று மட்டும் எல்லாப்பாகங்களையும் சேர்த்து படிப்பதற்குப் பதிலாக கொஞ்சம் வேதாந்த விஷயமும், கொஞ்சம் பாஷைப் பயிற்சியும், சிறு புராணத் தொகுதியும் ஆன்றோர்களின் நூலாராய்ச்சியின் கொத்துக்களும், பொது விஷய விநோதக்குறிப்புகளையும் புத்தியூட்டும் கதைகளையும் பெரியோர்களின் ஜீவிய சரிதைகளையும் இன்னும் இவைபோன்ற விஷயங்களனைத்தையும் கொஞ்சம் கொஞ்சமாய் படித்தல் எளிதாகவும் இனிமையாகவும் இருக்கும் அல்லவா? இவ்வாறு பயனடையச் செய்வதே நமது 'பைந்தமிழ்' போன்ற பத்திரிகைகளின் கருத்தாகும். ஆதலால் தமிழ் நாட்டு சகோதர சகோதரிகள் யாவரும் நமது பைந்தமிழை அன்புடன் வரவேற்று அதன் நோக்கத்தையும் பிரயோஜனத்தையும் முயன்று அறிந்து பரவச்செய்வது நற்கருமம் என்று எண்ணுவார்களாக நாம் வேண்டுகிறோம்.



---

# செந்தமிழ் நிந்தை சிவநிந்தையே யாம்

அன்பினைந்திணையென் றறுபதுசூத்திரம்
திருவாய்மலர்ந்த சிவபெருமானே
கொங்குதேர்வாழ்க்கைச் செந்தமிழ்கூறினன்
மதிமலிபுரிசைத் திருமுகந்தந்தனன்
வள்ளுவர் நூற்குவளர்சிறப்புரைத்தனன்
கீரன்முன் றேன்றிக் கிளர்சினப்பாவும்
பொய்யாமொழிமுன் புனைந்துரைபாவும்
இயம்பினனன்றியு மெழிலார்தில்லையுள்
அடியார்க் கெளியனென் றருளித்தந்தனன்
வாசகங் கோவை வளம்பெற வரைந்தனன்
தொண்டத் தொகையும் தொண்டர் புராணமும்
நிறைவினையெய்த அடியெடுத்துதவினன்
பரசிவன் பாகத்தமர்ந்தபாவையும்
கொணர்ந்தேன் சோறெனக் குளிர்கவிகூறினள்
நாடாமுதலென நாமகள்நவின்றனள்
தந்தையார் செவியில் மந்திரந்தந்தவன்

பகழிக்கூத்தன் பாடல்கேட்கவும்
பொய்யாமொழியெனும் புலவர்பாக்கேட்கவும்
தாமவர் தம்மேற் றமிழ்ப்பாட்டுரைத்தனன்
உருத்திர சன்மரா யுரைவிரித்தருளினன்
நம்பியாண்டாரெனும்நம்பிதனக்கே
யும்பல்முகத்தோன் செம்பொருளுரைத்தனன்
நான்முகத்தவனே நானிலந்தன்னில்
வள்ளுவனாத் தமிழ் மாமறையருளினன்
மணவாளனென்னும் மாமுனி தன்னைப்
பெருமாளழைத்துப் பேசினரென்பர்
இவ்வாறெல்லாம் இயற்றமிழ்தன்னை
அரனயனரிமுத லாமுத்தேவரும்
மூத்தபிள்ளையும் முருகக்கடவுளும்
அலைமகள் கலைமக ளாமணங்குகளும்
பேசினரெழுதினர்பீடுறப்பாடின
ரென்றாலிதன் சீரியம்பவும் போமோ
இம்பரிலன்றோ இவையெலாமென்றால்
திருக்கைலாயம் சென்ற சேரமான்
சிவபெருமான்றன் றிருச்சந்நிதியில்
உலாவெனும் நூலை யுரைத்தரங்கேற்ற
எல்லாத் தேவரு மிருஞ்செவிக்கமுதென
உண்டுகளித்தவிவ் வொண்டமிழ் மொழியைத்
தேவபாஷையாய்ச் செப்புதற்கியாதும்
ஐயம்வேறுண்டோ ஆரியப்புலவீர்
ஆரியம்நன்று தமிழ்தீதெனச்சொன
காரியத்தாலே காலன்வாய்ப்பட்டு
மாண்டுமீண்டனன் வாய்மதக்கோடன்
முத்தமிழுருவே முன்னோனுருவெனச்
சத்தியவசன சாத்திரம் கூறலால்
செந்தமிழ்நிந்தை சிவநிந்தையேயெனச்
சிந்தையிலுணர்ந்துப செந்தமிழ்போற்றி
வாழுமின் வாழுமின் வாழுமின்னீரே.

**ஜி. சதாசிவம் பிள்ளை,**
**"நீலலோசனி"** நாகை



# கருமியின் அருநிதி.

(18-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## 3. கடற்பயணம்.

உடனே தங்களுக்குத் தேவையான சாமான்களைமட்டும் எடுத்துக்கொண்டு, முன்னாளிலேயே ஏற்பாடு செய்து வரவழைக்கப்பட்ட வண்டியொன்றில் கிழவனும், குமரனும், கடற்கரைப் பட்டினத்துக்கேகினர். பாதையிலேயே முதியோன் நீக்கு மேலிடவாரம்பித்தது. சுவாசம் நின்று நின்று தொந்திரை கொடுத்தது. அவனைப் படுக்கச்செய்து வண்டியைப் பின்பற்றி நடந்தான் தீரன்.

கதா நேயர்காள்! நமது தீர சுந்தரனின் சரித்திரத்தை இங்கு சுருக்கிக் கூறுவோம்.

இவன் சென்னையிலிருந்த நடுத்தரக்கணவானின் மகன். நல்ல ஸ்திதியில் தன்னிளைய சகோதரியோடு வாழுநாளில் பெற்றோரை இழந்தான். கன்னிப்பருவம்வாய்ந்த தங்கையைத் தக்கவந்தஸ்திலுள்ள குலமகனுக்கு விமரிசையாக மணமுடித்து சற்றேறக் குறைய ஆண்டியானான். இது அசாதாரணமானதல்ல: தற்கால வாசரணைக் கேற்றபடியேயாகும். நல்ல வரனால் அவனுக்குத்தக்க வாறுள்ள வரதட்சிணையும், கலியாணவாடம்பரச்செலவும், நடுத்தரத் தோரின் ஸம்பத்துக்கெதுவரை ஹானியாய் முடிகிறதென்பதை யாவருமறிவார். ஆகவே, தீரனும் தன்னருந்தங்கைக்கு மணமுடிப்பதில் அநேகமாகச் செலவிட்டான். பிறகு தன்பாடு பெரும் பாடாகத் தனக்கெஞ்சிய வீட்டை வாடகைக்கு விட்டுத் 'திரைகடலோடியுந் திரவியந்தே' டென்ற மூதுரைக்கேற்க கப்பலேறி பர்மா சென்று, காயமாக ஒரிடத்திலமராமல் கிடைத்த வேலையை அங்கங்கேசெய்தும் தக்கவுத்தியோகத்தைத்தேடியும், தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதுமாக பதினெட்டு மாதங்களாகத் திரிந்துகொண்டு அகஸ்மாத்தாய் முந்திய இரவு கிழவன் குடிசைக்கு வந்தான். இவனும் உலகநடவடிக்கை நன்றாகத்தெரிவதற்குப்போதுமான கல்வியை யடைந்தவன். இப்பொழுது தீரனுக்கு இருபத்தாறு

வயது. காலக்ஷேபத்துக்கென்று வெளியேற்றது முதல் மானமாக வயிற்றை நிறப்பி வியாகூலமேயற்றிருந்த அவனுக்குத் தற்செயலாய்க் கிடைத்த தனம் அவனைச்சிறிது ஸந்தோஷிப்பித்தாலும் உலக வியல்பையொத்துத் தலைகெரியாத பித்தனுக்கவில்லை. சுந்தரனுக்கென்று கிழவன் கொடுத்த ஐம்பதினாயிரம் ரூபாய், தன்னந்தனியனும் தீரனுக்கு யதேச்சாவினியோகத்துக்குப் போதுமானதே என்றாலும், தானேற்றுக்கொண்ட ஒப்பந்தத்தை நிர்விக்கினமாக முடிப்பதைப்பற்றிய கவலை அவனை வருத்தியதால் அதேயோசனையாக நடந்தான்.

வண்டியில் கிழவன் கடைசியாகச் சேகரித்து இன்னும் சுத்தஞ்செய்யப்படாத நவமணிகளின் கற்றுண்டுகள் அடங்கிய பெட்டியொன்றும் கொணர்ந்திருந்தான். அதைத் திறந்து, "என்னுடைய உயிர்போமளவும் இக்கற்களை விற்றுவருந்தகை செலவுக்குக்கண்டு மிகுதியாகும். நகாஞ்சேர்ந்ததும் மரணசாஸனமொன்று வரையவிருக்கிறேன். அதன் ஷரத்துக்களை நீயனுஸரிக்கவேண்டும்" என்றான் கிழவன்.

தீர:—"பெருங்கடனைப் பூரண விசுவாஸத்துடன் எனக்கொப்புவிப்பதைப்பற்றி மறுபடியும் யோசிக்க உம்மை வேண்டுகிறேன்."

கிழ:—"கண்மூடிக் கிணற்றில்விழுகிற வயோதிகன் நானல்ல. இதுகாறும் ஈசனை நினைத்திராத வெனக்கு நேற்றுமுன்னிரவில் அக்கொடியவர் பரமகுருமூர்த்தமாக என் கண்களைத் திறந்தனர். 'சாங்காலத்திற் சங்கரா' வென்பாரைப்போலத் தப்பவழியின்றி இறைவன் திருவருளையுன்னச் செய்தனர். அவனேயாகி நீ என்னையாட்கொண்டனை. மேனிகழ்ந்ததைக்கூற அவசியமில்லை; சக்தியுமில்லை. என்குலம் உன்னாலேயே விளங்கவிருக்கிறதெனில் வேறென்கூறுவது!"

தன்னுயுளில், கிழவனுக்கு அறுபது வயதிருக்கலாம், ஒருவரையும் நேசித்து நம்பாத பெரியவன், அந்தியத்தில் அன்னியனை விசுவஸித்தது மண்குதிரையால் நீரைக்கடத்தலையொக்குமோவெனில் பின்னர் தானே விசதமாகும். மாலையில் நகரஞ்சேர்ந்து, ஓர் ஹோட்டலில் நல்லவிடந்தேடி கிழவனைப் படுக்கையிற்கிடத்தி கியாதிபெற்ற வைத்தியரை அழைத்துவந்தான் தீரசுந்தரன்.



"என்காலவரை எவ்வளவு? மூன்றுநாள்: ஒருவாரம். வழுவழுப்பு வேண்டாம்; நிச்சயமாகக் கூறவேண்டும். இல்லாவிடில் உம்மைப் பொய்யனென்பேன்", என்று நோயாளி வைத்தியனைப் படபடப்பாகக் கேட்டான். டாக்டரும் நன்றாகப் பரிசோதித்து, "வண்டிப்பயணம் அதிகக் கெடுதலுக்கிடமாயிற்று வலி, வியாதியானல் உதவுவேன்: புதிதாக யந்திரஸ்தாபனஞ் செய்வது கூடாதபடி; கட்டாயமாகக் கேட்பதால் தட்டாதுரைப்பேன். உமதிந்திரியவோட்டங்கள் ஒருவாரத்துக்குள்ளேயே ஒடுங்கும்," எனலும், "ஸரி. நீர் ப்ரும்ஹாவென்று நானுரைக்கவில்லை. எஞ்சிநின்ற எனது வேலையை முடித்து இவ்வுலகுடன் சாந்தியடையப் போதுமான பொழுதையே நான் விரும்பியது," என்று பதிலுரைத்து, வைத்தியன் கொடுத்துச்சென்ற மருந்தைப் பருகினான் கிழவன்.

காலையில் ஓர் வக்கீலை அழைப்பித்து, பின்னர் வியவகாரத்துக்கிடனின்றித் தன்பொருளனைத்தையும் தீரசுந்திரன் இஷ்டப்படி செய்வதென்று உயிலெழுதுவித்துப் பெரியபையிலிருந்த வைந்நூறு நோட்டுகளின் நம்பரைக்குறிப்பிட்ட தனிக்காகிதத்துண்டையும் அவ்வுயிலையும் தீரன் கையிற்கொடுத்துக் கிழவன், "என்னருங்குமரா! இச்சாஸனப்படி எல்லாமுனதாகிலும் பெரியபையை மட்டும் நமது தாய்நாடு சென்றதும் பிரித்து அதிற்குறித்த விவரப்படி செய்வாயாக," என்றான்.

தீர:—"இத்தொகைகள், காகிதங்களனைத்தையும் வழியிற்காப்பாற்றவேண்டிய கஷ்டமின்றி இங்கு பாங்கியிற்செலுத்தி இந்தியா சேர்ந்து வரவழைத்துப் பெற்றுக்கொள்வது நலம். இருவர்களை ஏற்கனவே எதிரியாக்கினேன். அவர்கள் இப்பொழுதும் நம்மைத் தொடர்ந்திருக்கலாம்."

கிழவன்:—"மறுபடியும் அடியைப்பிடிக்கிறாய். பாங்கியிற் செலுத்துவதானல் இத்திரவியம் என்னிடம் இதுவரை எப்படி இருந்திருக்கும். நானே அனுப்பியிருக்கலாகாதா? தபால்மூலம் ரிஜிஸ்டர் செய்து சிறிது சிறிதாகச் சேர்ப்பித்திருக்கலாமன்றோ? என்னைப் பித்தனென்றாலும், வீம்புக்காரனென்றாலும் மதிக்கேன். மற்றனைத்தையும் உன்னிஷ்டப்படி நடத்திப் பெரியபையைமட்டும் நீயே கொண்டுபோக வேண்டியதுதான்."

(தொடரும்)

P. K. சர்மா.

# ஜீவன்-ஞானம்.

நங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருளின் சிருஷ்டி விஷயத்தைப்பற்றியும், மோட்சத்தை ஸாதிக்கும் மார்க்கத்தைப்பற்றியுங் கூறுவது ஞானமாகும். இஞ்ஞானமானது இருவகையாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன:—பிரபஞ்சஞானம், தத்வஞானம் என்பனவாம்

பிரபஞ்சஞானம்:—இஃது கடவுளின் சிருஷ்டி விஷயத்தைப் பற்றி கூறுவதாகும். பிரபஞ்ச, என்கிற பதத்தின் தாத்பர்யமென்னவென்றால், மாயை என்பதுவே. இம்மாயை என்பது ரூபமில்லாமலிருக்கும் ஒரு வஸ்து. இப்பிரபஞ்ச ஞானத்தின் முக்கியமான அம்சமென்னவென்றால், நம் கண்களுக்குப் புலப்படுவையெல்லாம் ஒரு விதமான தோற்றம் என்று கூறுவதாகும். இதனால் நமக்கு என்ன தெரிகிறதெனில், நம் கண்களுக்குத் தென்படுவை யெல்லாம் பொய்யென்பதாகும். பின் எதுதான் உண்மை என்றொரு கேள்வி யுண்டாகக் கூடுமல்லவா? எது உண்மையெனில், தத்வஞானம் என்ன கூறுகிறதோ அது தான் உண்மை.

தத்வஞானம்:—இஃது மோட்சத்தை சாதிக்கக்கூடிய மார்க்கத்தைக்கூறுவதாகும். இஃது இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:—மார்கஞானம், ஸத்வஞானம்.

மார்க்கஞானமாவது:—மோட்சத்திற்கு வேண்டிய சாதனங்களையடையும் மார்க்கத்தை யெடுத்துச்சொல்லும் ஞானமாகும் இது. மார்க்கம் என்றால் மோட்சத்தை யடைவதற்கு வேண்டிய சாதனங்களை சம்பாதித்துக்கொள்ளும் வழி என்று தாத்பரியம்

ஸத்வஞானம்—இஃது, "பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றுதான். நமது கர்மசரீரத்திலுள்ள நேத்திரங்களுக்குப் புலப்படுவை தோற்றங்கள். எங்கும் பரமாத்மாவைத்தவிர வேறு ஒன்றுமில்லை" என்று கூறும் ஞானமாகும். ஸத்வஞானம் என்னும்



பதம் வடமொழியைச் சார்ந்ததாகும். வடமொழியில் ஸஹ என்றால் அவன் அல்லது அவர் என்று பொருள். த்வம்-என்றால் நீ என்றுபொருள். ஆதலால் ஸஹத்வம்-என்றால் அவர் நீ என்று அர்த்தமாகும். அவர் எனில் யாரென்றால் பரம்பொருள்தான். ஆதலால் ஸத்வஞானம் என்னும் பதத்தின் பொருளென்னவெனில் "அவர் நீ" என்று சொல்லும் ஞானமாகும். ஸஹ, த்வம் ஞானம் என்னும் மூன்று பதங்களும் சேர்ந்து ஸத்வஞானமென்று மாறுகின்றது. சிலர் "அவர் நீ" என்றால் என்ன என்று கேட்பார்கள். அதற்கு சிவகீதையில் பரமேச்வரர் சொல்லுகிறதாவது, "எங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருள்தான் உன் ஆத்மா. ஆகையால் நீதான் பரம்பொருள்" என்றவாறு. இதிலிருந்து நமக்குத்தெரிவதென்னவென்றால், நமக்கும் பரம்பொருளுக்கும் வித்தியாசமே கிடையாது என்பதாகும். சிலர், நாமும் பரம்பொருளும் ஒன்றாக விருந்தால் நாம் ஏன் உபாஸனைகள் செய்து மோட்சஸாதனத்திற்கு மார்க்கத்தைத் தேடவேண்டும் என்று கேப்பார்கள். உண்மைதான் இது. ஆனால் நாம் ஏன் உபாஸனைகள் செய்யவேண்டும் எனில் நமக்கும் பரம்பொருளுக்கும் இருக்கும் வித்தியாசத்தைப் போக்கடித்து, பரம்பொருளோடு ஐக்யமாவதற்குத்தான். அவ்வித்யாசம் என்னவென்றால், கர்மபந்தனம் என்பதுதான். இக்கர்மபந்தனம் நம்மை மாத்திரம்தான் சூழ்ந்துகொண்டிருக்கிறது. இஃது மாயை என்பதால் உண்டாகப்பட்டது. இதனால் நம்மை மாயை சூழ்ந்துகொண்டிருக்கிறதென்று நமக்குத்தெரிய வருகிறது. இம்மாயை என்பது பிரக்ருதி என்றும் கூறப்படும்.

பிரக்ருதி:—நாம் இதற்குமுன் பரமாத்மாவைத்தவிற வேறு ஒன்று மில்லையென்று சொன்னோமல்லவா? இந்தப்பரமாத்மாவின் திருவிளையாடலின் முக்கிய பாகமாகும் இப்பிரக்ருதி. இப்பிரக்ருதியின் காரணம் பற்றித்தான் இவ்வுலகம், அதன் விநோதங்கள் முதலிய தோற்றங்கள் நம் கண்களுக்கு உண்மைபோல் புலப்படுகின்றன. இப்பிரக்ருதியானது இருவகையாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன, சூட்சுமப்பிரக்ருதி, ஸ்தூலப்பிரக்ருதி என்பவையாம்.

சூட்சுமபிரக்ருதி:—இஃது கடவுளின் சிருஷ்டியைப்பற்றிய பிரக்ருதி. அஃதாவது, நமது சரீர சிருஷ்டியைத்தவிர மற்றெல்லா சிருஷ்டியைச்சாரும் மாயையாகும் இது. நமது நேத்ரங்களுக்குப் புலப்படும் தோற்றங்கள் முதலியவைகளை உண்டாக்கிய மாயையாகும் இச்சூட்சுமப்பிரக்ருதி. அது தவிர கடவுளின் முக்கிய சிருஷ்டியாகிய பிரம்மாண்ட சிருஷ்டியைப்பற்றி உண்டாக்கியது சூட்சுமப்பிரக்ருதி.

ஸ்தூலபிரக்ருதி:—நமது சரீரத் தோற்றத்துக்குக்காரணம் ஸ்தூலபிரக்ருதியாகும். ஸ்தூலம்-சரீரம். ஆதலால் ஸ்தூலபிரக்ருதி என்பது நமது சரீரம் என்னும் தோற்றத்துக்காரணமாகும். இச்சரீரம் என்பது எப்படி உற்பத்தியாயிற்று என்றால், மர்மஸ்தானமும், உபஸ்தானமும் கூடினால் இதிலிருந்து கர்ப்பத்தில் பிண்டமாக ஸ்தூலம் என்னும் சரீரத்தோற்றம் உண்டாகிறது இதைப் பற்றி, திருவள்ளுவ நாயனார் இயற்றிய 'ஞானவெட்டி' யில் சரீர உற்பத்தி என்னுமிடத்தில் ஒரு பாட்டு இருக்கிறது. அஃதாவது;

வீடுகட்டினேன் விண்ணோடு மண்ணையுங்கூறதாச் சுக்குறியிந்த ரெண்டினால், பாடுபட்டுச்சலத்தைத் தெளித்துடன் பற்றி நெருப்பையுங்காற்றையுஞ் சேர்த்துமே, கூடுண்டான குறிமண்ணுந் தண்ணீருங் கூட்டிப் பிசைந்துற வாட்டியுந்தமுடன், நீடுலகும் புகழாவியத்துக்குள் நிலைக்கவெண்சாணும் நேத்தியைப்பாத்திரும், வீடுகட்டிக்கொண்டேன் நானொரு வீடுகட்டிக்கொண்டேன்.

அதாவது, இரண்டு குறிகளின் கூடுதலால், நெருப்பு, காற்று ஜலம், இம்மூன்றையுமுண்டாக்கி, இதனால் ஸ்தூலம் என்னும் கூட்டையுமுண்டாக்கி, மாயையின் நேர்த்தியைப்பாரும் என்று பொருள்.

இப்பேர்ப்பட்ட விஷயங்களையறிந்து, பிரபஞ்ச ஞானத்தைத் தெரிந்து, மாயாக்கடலைக்கடந்து, சரியான மார்க்கமாகிய தத்வ ஞானத்தில் நடந்து மோட்ச சாதனங்களையடைந்து, எங்கும் பரவி புகழாவியாயிருக்கும் பரம்பொருளோடு ஐக்யமாகவேண்டியதை



உத்தேசித்து, அடுத்தசஞ்சிகையில் நாம் எழுதப்போகிற "ஜீவன் உற்பத்தி," என்னும் வியாசத்திற்கு ஒருசிறிய முன்னுரைபோல் பாவித்து இவ்வியாசத்தை எழுதத்துணிந்தோம். கடவுள் நம்மேல் கிருபைவைத்து, நமது "பைந்தமிழின்" சிறப்பை அதிகரிப்பாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆத்மானந்த யோகீஸ்வரர்.

# பெண்கல்வி.

ஆழியால் சூழப்பட்ட இந்நில உலகின்கண் மானிடராகப் பிறத்தலரிது, பிறப்பினும் கூன், குருடு, செவிடு, பேடு முதலிய அங்கவீனமில்லாது பிறத்தலரிது; பிறந்தாலும் ஞானமும் கல்வியும் அடைதல் மிகவரிது. ஆயினும் மானிடர்களாகிய நம்மவர்களின் அறிவை விருத்திசெய்வது கல்வியாம். அன்றியும்

"அறம் பொருளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க்குற்றதுணை."

என்றாற்போல் இம்மையிலும் நான்கு வகைப் புருஷார்த்தங்களைப் பயக்கும் என்றார்குமரகுருபரர். உப்பில்லாப்பண்டம் குப்பையிலே என்பதுபோல மானிடர்களுக்கு ஞானத்தை அளிக்கும் கல்வி அவசியமாம். இதை ஞானம், இன்பம், நல்லொழுக்கம், மரியாதை இந்நற்குணங்களையளிக்கும் ஓர்கற்பக விருக்ஷமென்னலாம். இந்த நற்குணங்களையளிக்கும் கல்வி மனிதர்களுக்கு எப்படி அவசியமோ அவ்விதமே மாதர்களுக்குங் கல்வி யின்றியமையாததாகும்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்றும் படிப்பதினால் இம்மணிகள் சோரம் போவார்களென்றும் மமதை விருத்தியாகுமென்றும், கடவுள் பக்தியே இருக்காது என்றும்

பெற்றோர்களை அவமதிப்பாரென்றும், விபரீதமான மண்டாதுமென்றும் தன்னிஷ்டப்படி வரனைத் தேடிக்கொள்வரென்றும் மணமான பின்பு மாமன் மாமி மைத்துனர், முதலியவர்களிடம் சண்டை போட்டுக்கொண்டே இருப்பரென்றும் எப்போதும் புஸ்தகமும் கையுமாக இருப்பரென்றும், கெட்டகாந்த முதலிய கவிப்பாடல்கள் பாட ஆரம்பிப்பரென்றும், நாற்குணங்களாகிய அச்சம் நாணம், மடம் பயிர்ப்பு ஆகிய இவை ஒழியுமென்றும் மானம் பெரிதாய்த் தோன்றுது என்றும், பற்பல தூஷணைகளைச் சொல்லி விட்டுவேலை தெரியாதவள் வேம்புக்குச் சமானம் என்றும் கூறி பெண்கள் படிப்பை நிறுத்தி சமையல் செய்யும் வேலைக்கு மாக்கு கொடுக்கின்றனர். அந்தோ! பாவம்!! பாவம்!!! மதியீனம் என்றாலும் தகும்.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங் கண்ணென்ப வாழு முயிர்க்கு,' என்று ஆண் பெண் நீங்காது உயிர் என்று சிறப்பித்ததாலும், 'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு,' என்றதாலும், மஞ்சள் அழகும் அழகல்ல என்றதாலும் சேலைமேல் சேலைகட்டும் தையலார்களாகிலும், நூல்மேல் எழுத்தாணி பூணாத பெண்ணாகாதென்றும் கல்விக் கடலுக்கே பெண்ணரசி கடலாசனியே என்றதாலும் ஔவை மணிமேகலை முதலிய பண்டித சிரோன்மணிகளாலும் பெண்களுக்குக்கல்வி அவசியம் என்பது நான் சொல்லாது தெற்றென விளங்காநிற்கும்

கல்லா ஒருவன் பஞ்சமா பாதகங்களைச் செய்யத் துணிகிறான் என்றால், கல்லாத பெண்கள் என்ன என்ன செய்யக்கூடும். சிலர் கல்லாத பெண்கள் புருஷன், மாமி மாமன் நாத்தி இவர்களிடம் நன்னெறி தவறாது இருக்கவில்லையா என்பர். ஆனால் அவர்கள் இல்லறத்தை ஒழுங்காக நடத்தத்தெரியாது தியங்குவர். அப்படி ஒழுங்காக இல்லறத்தை நடக்கக்கூடிய பெண்கள். அஷ்டகாரிகளை செய்யவில்லையா? அநேகர் சன்மார்க்கத்தை விட்டுத் த நடக்கவில்லையா? அதுபோல் அரைகுறையாகப் படித்த பெ இவ்விதம் செய்வது சகஜமே. ஆனால் அநேகர் அவ்விதம்



தில்லை. இந்த அரை குறையாகப் படித்த ஓர் பெண்மணியின் சரிதையைக் கூறுவோம்.

பதினாறு வயதுள்ள ஓர் சிறுமி, ஏழாம் வகுப்பு வரை படித்து டெய்லரிங் முடித்து உபாத்திச்சியம்மாளாக வந்தாள். அவள் தனது பதினெட்டாம் வயதில் கல்யாணம் செய்து கொண்டாள். புருஷனும் மனைவியும் சம்பாதித்து வந்தனர். புருஷன் மனைவியை விட குறைந்த சம்பாத்திய முடையவனாயிருந்தான். ஒருநாள் புருஷன் வேலைக்குப்போய் விட்டுத்திரும்பி வந்தான். அப்போது மனைவியைப் பார்த்து கால் சுத்திசெய்ய ஜலம் கொண்டுவா என்றான். அப்போது அவள் நாம் படித்தவளல்லவா? இவனுக்கு நாம் ஜலம் கொண்டுவந்து கொடுக்கிறதாவது என்றெண்ணிக் கொண்டு, நான் படிக்கவில்லையா. உன்னைப்போல் முட்டாளா! என்னைவிட நீ அதிகம் சம்பாதிக்கின்றாயோ! என்று திட்ட ஆரம்பித்தாள். இதைக்கேட்ட புருஷன் இவ்விடத்தில் இருப்பதைக் காட்டிலும் புலி வாழுங்காடே நன்று என்று எங்கேயோ போய்விட்டான். அவள் தன் கர்வத்தால் கற்பையிழந்து உத்தியோகமும் போய் அதிக கஷ்டப்பட்டு இருந்தாள்.

நன்றாகப்படித்த பெண்கள் புருஷனுடன் கூடி இல்லறத்தை நடாத்தி வருவார்கள். இல்லற மல்லது நல்லறமன்று என்ற ஓர் தர்மத்தை கைக்கொண்டு வாழ்வர். அவர்களுக்குக நற்பு வளருமே யன்றி குறையாது. இதைப்பற்றியன்றோ

"பொருந்துகற் கலைதெரி பூவை கற்பது
இருந்திய மகுமலாற் றேய்ந்து போமெனல்
வருந்திடா துயிர்தரு மருந்தை மானுடர்
அருந்திடிற் சாவரென் றுரைத்த லொக்குமே"

என்று கூறினார் போலும். இந்த சீதை, தமயந்தி, சந்திரமதி, நளாயினி, சகுந்தலை, சாவித்திரி, முதலிய கற்புள்ள நம்மிந்திய மாதர்களை கவனிக்க வேண்டும்

எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி என்றபடி வாசித்த பெண்களுக்கே பேதைமையிருக்கையில் கல்வி

பயிலாப் பெண்கள் மதியினைத்தால் கற்பிழந்து கவலை கொண்டு தவிப்பர். இம்மாதிரியான பெண்களில் அநேகரை நாம் இக்காலத்திற் பார்க்கலாம். வாசித்த பெண்கள் பெரியோர் சிறியோர் இவர்களிடம் மரியாதையாய்ப் பேசுவார்கள். கோள்சொல்லுதல் புறம்பேசுதல், பொறாமை இத்தீக்குணங்களிராது, என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். படிக்காத பெண்கள் தங்களைப்போல் பிறரையும் முட்டாளாக இருக்கும்படி செய்வரேயன்றி வித்தைகள் கற்பிக்கமாட்டார்கள். இவர்களுக்குப் பணப்பித்தே பெரும்பித்தாக இருக்கும். நகை அணிவதிலும், சீலை கட்டுவதிலும், கண்ணாக இருப்பார்கள்.

கற்பித்த பெண்கள் தங்கள் புருஷர்களுக்கு சமயாசமயங்களில் மந்திரி போல் புத்திபுகட்டுவர். தாயைப்போல் புருஷனுக்கு அன்ன ஆகாரம் கொடுத்து உபசரிப்பர். சீக்கிரத்தில் நடக்க வேண்டிய காரியங்களைத் தாங்களே நடத்திப் புகழ்பெறுவார்கள். விருந்தினர்களை உபசரித்து வருவார்கள். புருஷன் மனதிற் கிசைந்தாற்போல நடந்து வருவார்கள். வீட்டுப் பொருள்களை பத்திரமாகப் பாதுகாப்பார்கள். புருஷனது விசனகாலங்களில் உத்தம நண்பனைப் போல் தங்களது இனிய குரலால் சமதானப்படுத்தி ஆனந்தத்தையுண்டுபண்ணுவர். மிதமிஞ்சி செலவழிக்கமாட்டார்கள். சரியான காலங்களில் தங்களது வேலைகளைச்செய்து நற்புத்தி புகட்டும் நூல்களை வாசிப்பார்கள்.

(தொடரும்)

எஸ். என். ராமு,

கூறைநாடு.

# வேதாந்த வசனம்

(26-ம் பக்கத்தொடர்ச்சி.)

(முதல் வினா):—"இது உள்ளது, இது விளங்குகின்றது," என்கின்ற சொல் வழங்குகிறது. அந்த உண்மையான 'உள்ளதும்,' 'விளங்குகிறதும்' எப்பொருளில் நிலைத்தவை?.



[நமது கண்களுக்குத் தோற்றுகின்ற ஒவ்வொரு பொருள்களையும், உதாரணமாக "பானை இருக்கிறது, அதாவது உண்மை (உள்ளதன்மை.) விளங்குகின்றது." ஆனால் அந்தப்பானை உடைந்தால் விளக்கமிராது போகாது. அதனால் தோற்றமுள்ள பொருள்கள் கெடுவதாயினும் உண்மையும், விளக்கமும் வேறுபடா. பகவத்கீதையில் (அத்தியாயம் 4. சுலோகம் 16-ல்)" 'பொய்ப்பொருளுக்கு உண்மை இல்லை; மெய்ப்பொருளுக்கு இன்மை இல்லை;' என இவ்விரண்டிற்கும் முடிவுகண்டு வைக்கப்பட்டுள்ளது மெய்ம்மையைக் காணும் இயல்பினாராலே," என்றுமுளது. அதாவது பொய்ம்மையான குளிர்வெப்பம் முதலிய வற்றிற்கும், அவற்றின் காரணமான நீர் நெருப்பு முதலிய வற்றிற்கும் உண்மை யென்பது இல்லை. ஏனெனில் இவைகள் விகாரமாம். விகாரமோ தன் நிலை திரிகின்றது. உதாரணமாக பானையை கண்ணினால் உள்ளும் புறமும் உற்றுப் பார்த்து ஆராய்ந்தால், அவைகள் மண்ணாகவே புலப்படுகின்றமையாலும் அங்ஙனமே சகலமான விகாரங்களும் காரணத்தைத் தவிர வேறாகப் புலப்படாமையாலும் பொய்ம்மையாம். அந்தப்பானைக்குக் காரணம் மண்ணும், கார்யமான பானை முதலானவை தோன்றுதற்கு முன்னும் அழிதற்குப் பிந்தியும் புலப்படாமையாலும் பொய்மையாம். முந்தியும் பிந்தியுமில்லாதது நடுவிலும் கிடையாதென மாண்டூக்ய உபநிஷத்தின் கொள்கை. ஆதலால் தோற்றமுடையன வெல்லாம் நிலை வேறுபட்டுக் கெட்டாலும், உண்மையும், விளக்கமும் நிலை வேறுபடாது, ஒரு தன்மையனவாய்க் காணப்படுகின்றன—என்று ஆராய்ந்து பார்க்கும் மாணாக்கனுக்கு," இந்த உண்மையும் விளக்கமும், பானை முதலிய ஒவ்வொரு பொருளிலும் அதற்குறிய அளவு வடிவம் முதலியன போல, தனித்தனியாக தங்கியவையா? அல்லது, இவை பானை முதலிய ஒவ்வொரு பொருளிலும் வேற்றுமையில்லாது பொதுவாகக் காணப்படுகின்றமையால், அந்த ஒவ்வொரு பொருளினுடைய ஆத்மாவாக எங்குமுள்ள ஈசுவரனிடத்துத் தங்கியவையா? ஆத்தன்மையாகிய அதளுடைமையானது '(அதள்-பசுவின் கழுத்தில் தொங்கும் சதை) ஒவ்வொரு பசுவினிடத்தும் தங்குவதுபோல்" என்பது சம்சயம்.

இவ்விஷயத்தில் மாறுக்கனைவன்," இனி, பானை முதலிய விசேஷ்யம் பொய்ம்மையான வாயிலே, விசேஷணம் விசேஷ்ய மிரண்டும் ஓரே இடத்து நிற்றலென்பது கூடாதெனின் (அதாவது "எங்கும், விசேஷண விசேஷ்யங்களிரண்டும், மெய்ப்பொருளாகவே இருக்கக் காண்கிறோம். ஆகவே, 'உள்ளது' என்பதுபோல, பானையும் மெய்ப்பொருளாகவே இருக்கவேண்டும்.")" என்று ஆசேஷபிக்கையில்,

குரு:—" அப்படியன்று; விசேஷணம் விசேஷ்யம் என்ற இரண்டனுள் ஒன்று பொய்ம்மையான வளவிலும், கானல் முதலானவற்றிலே 'இது ஜலம்' என இவை இரண்டும் ஓரே இடத்து நிற்றலைக் காண்கிறபடியாலென்க. ஆகவே, தேகம் முதலியனவும், குளிர்வெப்பம் முதலானத்வந்த்வமும், அவற்றின் காரணமுமாகிய மெய்ப்பொருளுக்கு இருப்பில்லை என்பதாம். அவ்வாறே ஆத்மாவாகிய மெய்ப்பொருளுக்கு இருப்பின்மை இல்லை; எவ்விடத்தும் இல்லாமற் போகாமையால் எனக்காரணமே கீழே கூறியுள்ளோம்.

இவ்வாறு, மெய்ப்பொருள் பொய்ப்பொருள்களாகிய கீழ்க் கூறிய இந்த ஆத்மா, அநாத்மா இரண்டின் விஷயமாகவும் "மெய்ப்பொருள் எப்பொழுதும் உள்ளதுதான், பொய்ப்பொருள் எப்பொழுதும் இல்லாததுதான்" என்னும் முடிவான நிர்ணயத்தைத் தத்வதர்சிகள் கண்டறிந்தேயுள்ளார். தத், என்பது சகலத்திற்கும் பெயர். சகலமும் ப்ரஹ்மம்; எனவே அதன் பெயர் தத்என்பதாம். அதனது தன்மை தத்துவம்; அதாவது, ப்ரஹ்மம் உள்ளபடியிருக்குந் தன்மை. அதனைக் காணும் இயல்பினரே தத்துவதர்சிகள். நீயும் தத்வதர்சிகளின் கொள்கையைப் பின்பற்றி, சோகத்தையும், மோகத்தையும் விட்டு, ஓரே தன்மையுள்ளனவும் சுகம் துக்கம் முதலியனவும் ஓரே தன்மையில்லாத குளிர்வெப்பமும் முதலியத்வந்த்வங்களை, "விகாரமாயுள்ள இது, மெய்ப்பொருளாகவே இருந்து, கானல் ஜலம் போல பொய்யாகத் தோற்றுகின்றது" என உள்ளத்தில் நிச்சயித்து, தீரத்தன்மையோடு சாந்தனாய்ப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பது கருத்து.



இங்கு கானலைப்பார்த்து "இது ஜலம்" என்ற விடத்து, ஜலம் பொய்ம்மையாயினும், இது என்று சுட்டுதற்குக் காரணமாய் ஒன்று இருப்பதை உணரவும்; அவ்வாறே, 'உள்ளது பானை' என்னுமிடத்தில் பானை என்பது பொய்ப்பொருளாயினும், உள்ளது என்று வழங்குமாறு அங்கு ஒரு பொருள் இருக்கின்றதென்க அப்பொருளே ப்ரஹ்மம்.]

(தொடரும்)

**பக்தன்.**

---

☞ கீழ்வரும் மிக்க அபூர்வமான நாவல் முடியுமட்டும் நமது சஞ்சிகையில் மாதாமாதம் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படும்.

# அரசியின் அந்தரங்கம்

அல்லது

# மர்மக்கள்ளர்கள்.

## 1-வது அத்தியாயம்.

மருவூர் ஹோட்டல் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய ஒரு பெரிய ஹோட்டல், இவ்வூரிலுள்ள பெரிய ஹோட்டல். இதே ஒரு நாளிரவு சுமார் ஏழுமணி யிருக்கும், பூரணசந்திரன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். அவன் தனது அழகிய கிரணங்களான கிங்கரர்கள் மூலமாக பூவுலகின்கண் நடக்கப்போகின்ற சமாசாரங்களை அறிந்து கொண்டே இருக்கின்றான். அங்ஙனமிருக்குஞ் சமயத்தில் மருவூர் ஹோட்டலில் குடியர்களும் வெறியர்களும் வந்து கூடியிருக்கின்றார்கள். இந்த ஹோட்டல் சிறப்புற்றிருப்பதன் காரணம் இதில் சிறைச்சாலையொன்றிருக்கிறது. இதற்கு "அரசர் சிறையிடம்" எனப்பெயர். இதில் அரசியானவள் தனக்கு எதிர்த்து நின்றவர்களை ரகசியமாக இங்கனுப்பி சீக்ரத்தில் மரண தண்டனைக்குள்ளாக்கி விடுவாள். இப்பேர்க்கொத்த சிறைச்சாலையில் ஒரு புதிய சிறையாளி சுமார் ஒருவாரமாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். அவன் நெடகாத்திரமும், முறுக்கிய மீசையும், [illegible] தாடியும் துலக்கும் சிரண்ட கண்களும், படர்ந்த முகமும் உடைந்து அஞ்சாத கொலைகாரனாக காணப்பட்டான்.

14020
JL
0310021,112384
N23.1.2

அவன் அந்த சிறைச்சாலையிலொருவறையிற் காவலிலிருந்தான். அவனுக்கு முப்பத்திரண்டு வயதிருக்கும். தனது அறையில் அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான். அவன் வைக்கும் ஒவ்வொரு அடியும் "கணீர்" "கணீர்" எனசப்தித்தது. நமது நேயர்கள் முக்கியமான ஒரு விஷயத்தையறிய வேண்டும். அதாவது இந்த சிறையில் வைக்கப்படும் யாவரும் சீக்கிரத்தில் சிரச்சேதம் செய்யப்படுவார்கள். நண்பர்களே! இக்காலத்தில் சதியாலோசனைக்காரர்கள் சீக்கிரத்தில் கண்டு பிடிக்கப்பட்டு தூக்கிலிடப்படுவார்கள். ஆதலால் நமது சிறையாளி எதையோயோஜித்துக் கொண்டிருக்கையில், அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தவன் சட்டென்று திரும்பி பலகணியண்டை சென்று அதன்வழியாக வெளி நோக்கினான். சந்திரன் திவ்யமாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. தூரத்தில் புழுதிகள் கிளம்பி பாதையை மறைத்துக்கொண்டன. இவன் இருப்பது சிறைச்சாலையில் இரண்டாவதடுக்கு மாடியில். அவன் மறுபடியும் திரும்பி கதவை சாற்றிக்கொண்டு முன்போல நடந்து கொண்டிருந்தான். அவன் தனக்குள், "நம்மையா இவர்கள் பார்ப்பது. அது முடியாதே. இராணியறியாது செய்கிறாள்.........ஆ! குதிரைகளின் காலடிச்சத்தம்........." என்று மறுபடியும் பலகணியண்டை சென்று நோக்கினான். பல குதிரை வீரர்கள் தூரத்தில் வருவது கண்களுக்கு புலப்பட்டது. அதைக் கண்டதே சிறையாளி, "ஆ! இராணியின் படைகள். கங்காசிங்கும் அவன் வகுப்புக்களும்........." என்றதே சட்டென்று தலையை உள்ளுக்கிழுத்துக்கொண்டான். ஏனெனில் குதிரை வீரர்களில் ஒருவன் இவனறையை நோக்கினான். இராணியானவள் இன்று இரவு பதினொரு மணிக்குள் சிறையாளிகள் எல்லோரும் ரகசியமாய் சிரச்சேதம் செய்யப்படவேண்டியதென கட்டளை விதித்திருக்கிறாள். நமது கங்காசிங்கிற்கு இந்த சிறையாளி இருப்பது அறியவாராதலால் இவன் தலையை உள்ளுக்கிழுத்துக் கொண்டான். இராணி கமலாசனி கங்காசிங்கின் திறமையைமெச்சி அவனுக்கு உயர்ந்த வேலை கொடுத்திருக்கிறாள். கங்காசிங் இரண்டு வருடமாக இராணியின் ஆதரவின் கீழமர்ந்துள்ளான். அவனுக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம் நல்ல கம்பீரம் பொருந்தியவன். நல்ல சாத்வீக குணமும் வாய்ந்தவன் எனச்சொல்லலாம்.



கங்காசிங்கும் அவன் வீரர்களும் ஹோட்டல் வாயிலையடைந்ததும், அதன் சுவற்றின் மறுபக்கத்திற் திரும்பினார்கள். கங்காசிங் தனது புரவியிலிருந்து கீழிறங்கி தான் மாத்திரம் ஹோட்டலிற் சென்றான். அவன் வீரர்கள் ஆறுபேர் ஒவ்வொருவரும் ஆயுதபாணிகள். அவர்கள் மத்தியில் ஒரு அழகிய புருடன் இருந்தான். அவன் சிறையாக்கப்பட்டவன் போற்காணப்பட்டான். ஹோட்டலிற் சென்ற கங்காசிங் இரண்டு மூன்று நிமிடங்களில் திரும்பிவந்து தனது வீரர்களை நோக்கி, "ஹோட்டலின் பின்புறம் செல்லுங்கள்." என்று சொல்லி திரும்பி ஹோட்டலிற் சென்றான்.

உடனே வீரர்கள் கைதியுடன் ஹோட்டலின் பின்புறம் சென்றார்கள். அங்கு சிறிய கதவு ஒன்று திறக்கப்பட்டிருந்தது. வீரர்கள் அதன் மூலமாக உட்சென்றார்கள். அங்கு ஒரு சிறுவன் இவர்கள் புரவிகளைக்கொண்டுபோய் லாயத்திற் கட்டச்சென்றான். கைதியுள்பட இவர்கள் ஏழு பேரும் மற்றொரு, உயரமாயும், பழையதுமான ஒரு கதவைக்கடந்து புறக்கடைத்தாழ் வாரத்தையடைந்தார்கள். அங்கு கங்காசிங் ஹோட்டல் காரனான தீனதயாளுவுடன் பேசிக்கொண்டிருந்தான். அவன் வீரர்கள் புரவிகளிலிருந்து கீழிறங்குவதைக் கேட்டவுடன், "ஆ! அதோ வருகிறார்கள்......" என்றான். தீனதயாளு! "ஆம்; அந்தக்கைதியின் பெயரென்ன?" என்று கேட்டான். கங்காசிங்: "இராஜத்ரோகியான அந்தக் கைதியின் பெயரா? வர்த்தகசிங்கன்." என்றான்.

தீனதயாளு: "ஆ! வர்த்தகசிங்கரா? அவர் ஏன் இராணியின் கோபத்திற்காளானார்?" என்று கேட்டான்.

கங்கா: "அதை ஏன் கேட்கிறாய்? அவன் ஒரு குறும்புக்காரப் பயல். அவன் செய்த அக்ரமங்களுக்கு இது வேண்டியதுதான். நமது குப்புசிங்கின் மனைவியைப்பற்றிய குற்றம் உனக்குத்தெரியுமல்லவா? அதன் சங்கதியே. இதோ என் வீரர்கள் வந்துவிட்டார்கள்." என்றான்.

அதற்குள் வீரர்களும் வந்துவிட்டார்கள் உடனே தீனதயாளு தன் கையிலிருந்த சிறிய தீபத்துடன் தழ்வாரத்தைக் கடந்து ஒரு இருண்ட அறையை அணுகினான். அது பழையகட்டடமாகக்

காணப்பட்டது. ஹோட்டற்காரன் தனதிடையிலுள்ள ஒரு சாவியை எடுத்து அறையின் பூட்டைத்திறந்தான். பிறகு எல்லோரும் உள்ளே சென்றார்கள் அந்த அறையின் வடவண்டைப்பக்கமாக ஒரு படிக்கட்டு மேல்நோக்கிசென்றது. அதில் முதலில் தீனதயாளுவும், பிறகு கங்காஸிங்கும் அவன் வீரர்களில் மூவரும் நடுவில் சிறையாளியும், பிற்பாடு மூன்று வீரர்களும் சென்றார்கள் இவர்கள் பல சுற்றுவழியாகச்சென்று கடைசியில் நல்ல காற்றோட்டமுள்ள ஒரு அறையை அடைந்தார்கள்.

அந்த அறை நல்லஜமுக்காளங்களால் விரிக்கப்பட்டு, உயர்ந்த திறைகளால் தொங்கவிடப்பட்டிருந்தது. அந்த அறையிற் கங்கா சிங்கையும் அவன் ஆட்களையும் விட்டுவிட்டு தீனதயாளு வெளிச்சென்று சில நிமிடங்களில் கலவரமான முகத்துடன் அறைக்குள் நுழைந்தான். அதைக்கண்ட கங்காசிங் அவனை நோக்கி, "ஏனப்பா? என்ன சமாசாரம்." என்று கேட்டான்.

தீனதயாளு: "ஐயா நான் இராணிக்கு என்னவிதமாய்ப்பதிற் கூறுவேன்? ஆ!............" என்று தடுமாறவே,

கங்காசிங்: "தீனதயாளு, நடந்தசங்கதி என்ன? சீக்கிரம் கூறு." என்று அவசரமாய்க் கேட்டான்.

ஹோட்டல்காரன் "போனவாரம் சிறைபிடிக்கப்பட்ட ஜெகஜாலன் மாயமாய் விட்டான். அவன் இருந்த அறையில் ஒருவரையுங்காணோம். அறை பூட்டியபடியே இருக்கிறது. எல்லாம் கனவு போலிருக்கிறது. ஐயா நான் இராணிக்கு என்ன பதிற்கூறுவேன்!" என்று நடுக்கத்தாற் சொன்னான். கங்காசிங்: "அது உனக்கு கெங்ஙனந்தெரியும்?" என்று கேட்க, ஹோட்டல்காரன் "ஏன்? கீழ்ச்சாளரம் வழியாகநோக்கிய பொழுது அறையிற்காணோம். அறையைப் பூட்டிய படியே இருக்கக்கண்டேன்" என்றான்.

கங்காசிங் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாமென்றும், புதிய சிறையை முடித்தபின்பு அதைப்பற்றித் தான் இராணிக்குச் சொல்வதாகவுஞ் சொல்லி ஏதோ சில வார்த்தைகள்செவியிலூட்டினான். அதற்கு அவன் ஏதோசிலவார்த்தைகள் பதிற்கூறிய பிறகு கங்காசிங் தனது ஆட்களைநோக்கி, "ஹோ! சிலர் இங்கேயே



இருங்கள் இரண்டுபேர் எம்முடன் வாருங்கள்" எனச்சொல்லி கைதியுடன் வேறொரு அறைக்குச்சென்றான். அதில் நிரம்பவைக்கோல் தரையிற் பரப்பப்பட்டிருந்தது. ஹோட்டலாளி ஒரு மூலையிற் சிறிது வைக்கோலை எடுத்து அங்கு காணப்பட்ட ஒரு கள்ளச் கதவைத்திறந்தான். அதன்வழியாக ஐவரும் சென்றார்கள். அங்குள்ள படிகட்டுகள் பழையதாகவும், வெடிப்புள்ளதாகவும் காணப்பட்டன. அவைகள் சுற்றிச் சுற்றிச் சென்றன. கடைசியில் ஒரு சிறு கதவண்டை எல்லோரும் வந்தார்கள். அதைக் கொஞ்சம் சிரமபட்டு கங்காசிங்கின் ஆட்கள் திறந்தார்கள். அங்கு தோன்றிய அறை மிகவும் இருட்டாக இருந்தது. தீனதயாளு அதில் தன்கையிலுள்ள விளக்கைக்காட்டி, பிறகு தானும் உட்சென்றான். கங்காசிங்கும் அவன் ஆட்களும் அவனைத் தொடர்ந்தார்கள். அந்த அறையின் வடகுப்பக்கத்தில் கிழக்கு மூலையில் ஒரு துவாரம் இரண்டடி சதுரத்திற் காணப்பட்டது. அதில் எல்லோரும் இறங்கிச் சென்றார்கள். அது இன்னும் இருண்ட மற்றொரு அறையிற் கொண்டு சேர்த்தது. ஹோட்டலாளி அவ்வறை முழுவதும் சுற்றி நோக்கியபின், தன் கையிலுள்ள சாவியொன்றினால் அங்கு காணப்பட்ட ஒரு கதவை திறந்தான். அந்த அறையின் சுவர் பாறைகளாயிருந்தது. கங்காசிங் தான் கொண்டுவந்த சிறையாளியை நோக்கி, "வர்த்தகசிங்கரே! தாங்கள் முன்னடி செல்லுங்கள்........" என்றான். (தொடரும்)

ச. ப.

---

உ

## ஸ்ரீ மகாவிஷ்ணுக் கீர்த்தனம்.

('பூசுவதும் வெண்ணீறு' என்ற தேவாரச்சந்தம்)

1. "இராமநாம மந்திரமே எடுத்தோதும் மாந்தர்கட்கு
போராகவந் ததிர்த்து பாங்கழிக்கும் கூற்றன்வதை
வாராது காத்தளிக்கும் வன்மையுளக் கரியன்மால்
திருவடிகளடிவணங்கி துதிசெய்வோ மெப்போதும்."

(இராம நாம.)

2. "கல்லைபெண்ணாய் செய்தபெருங் காகுத்தனைக் கண்டுநானும்
அல்லல்தனை யகற்றவென்று அச்சுதனின் மலரடியை
உள்ளத்தி லெண்ணிமிக உறுதியாய்த் தான்போற்ற
பொல்லாத வினைகள்நீங்க பெருமாளு முகந்தருள."

(இராம நாம.)

3. "ஜனகன்மகள் ஜானகியை சரசமாக மணஞ்செய்ய
மன்னன்வில்லை தான்வளைத்து மாட்சியாக மணம்முடித்து
பின்னமின்றி திரும்புகையில் பரசுராமன் றனைஎதிர்த்து
அன்னவனைப் புறங்காட்டி அக்ஷணமே ஓடச்செய்த."

(இராம நாம.)

4. "சிற்றன்னை வாய்மொழியை சிறந்தவேத வாக்யமென
பற்றுடனே கடைப்பிடித்து பத்தினியும் லட்சுமணன்
உற்றதொரு மூவருமாய் ஒருமையுடன் வனமேகி
உற்றபெரு மிடையூரை உளமகிழ்ந்து அகற்றுவித்த."

(இராம நாம.)

5. "சீருற்ற கோவிந்த சாம்பதம் சாற்றுவோர்க்கு
பேருற்ற பெருமாளின் பிரபந்தம் சொல்மொழியாம்
அருளுற்று மனமிரங்கி அஞ்சேலென்று அரிஹரியும்
சேருற்று வந்தமிக சிந்தனைகள் களைந்தெரியும்."

(இராம நாம.)

எஸ். கே. கோ.

---

# ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர்.

(40ம்-பக்கத் தொடர்ச்சி)

இச்சித்தரஞ்சனர் சிறு பிராயத்தராயிருக்குங் காலத்தில் வங்காளபாஷை கற்பிக்கும் சிறிய பள்ளியில் வைக்கப்பட்டு, வித்யாரம்பம் செய்தனர். கல்கத்தாவின் பக்கத்துள்ள பவானிபுரத்தில் உள்ள லண்டன் மிஷன் கலாசாலையில் கல்வி பயின்றார். இவர் வயது அதிகம் ஆக ஆக சரித்திரப்பாடத்தில் இவருக்கு விருப்பம் அதிகரித்து தேசசரித்திரங்களைப் படிப்பார். இங்கிலீஷிலும் நன்றாகப்பேசும் திறமையும் கல்வி சாலையில் அடைந்தார்.



பிரவேசப்பரிக்ஷையில் இவர் தேறியமேல் கல்குத்தா (Presidency College) இராஜதானி காலேஜில் உயர்தரக் கல்விக்குப் போய்ச் சேர்ந்தார். கல்லூரி மாணாக்கர்கள் கூடி பல விஷயங்களை எடுத்துப் பேசப்பழகுவதற்கும் ஆங்கில பாஷையிலபிவிர்த்தி யடைவதற்கும் ஒவ்வொரு கல்லூரியிலும் சில சங்கங்கள் ஏற்பட்டிருப்பது எப்போதும் வழக்கம். அதுபோல அக்கல்லூரியிலிருந்த சங்கங்களில் இவர் காரியதரிசியாக விருந்து ஒவ்வொரு மீட்டிங்கிலும் யாவரும் வியக்க உபன்யாஸம் செய்வார். அக்கல்லூரியில் இவர் வாசிக்குங் காலத்திலே இவன் நன்றாய்ப் பேசிப் பிரஸங்கிப்பவர் என்று பெயரடைந்தார். உபாத்தியாயர்களும் இதர மாணாக்கர்களும் இவரிடம் அத்யந்த பிரியமுடன் இருந்து வந்தார்கள். ஆங்கில கவிச்ரேஷ்டர்களான ஷேக்ஸ்பியர் மில்டன் முதலானவர்களுடைய நாடக கவிகளையும், ஆங்கில பிரஸங்க நிபுணர்களான பர்க் முதலியோருடைய உபன்யாஸங்களையும் நன்றாய்ப் படிப்பதில் இவருக்கு வெகுபிரியம். தேசபக்தியில் சிறந்தவர்களான ஜோஸப் மாஜினி (Joseph Mazzini) காரிபால்டி (Garibaldi) முதலியோரின் சரித்திரங்களையும் இடைவிடாது படிப்பார். வெகு சீக்கிரம் கல்லூரியில் படிக்கும் இதர மாணாக்கர்களும் உபாத்திமார்களும் இவரது பிரசங்கநேர்த்தியை யதிசயிக்கத் தொடங்கினார்கள். இவ்வாறு ஆங்கில பாஷையில் தேர்ச்சியடைந்து அப்பாஷையில் மடைதிறந்த வெள்ளம்போல் பேசுந்திறமை பெற்ற போதிலும் இவருக்கு தாய்ப்பாஷையின்மீதுள்ள அபிமானம் குன்றவில்லை. வங்காளி பாஷையிலுள்ள பற்பல நூல்களைப்படிப்பார். இவ்வாறு இவர் அக்கல்லூரியில் படித்து எப். ஏ. பரிக்ஷையும் பி. ஏ. பரிக்ஷையும் தேறினார்.

இப்போது இவர் குடும்பத்தின் நிலையை நோக்கிப் பலபந்து மித்திரர்கள் இவரைக் கவர்ன்மெண்டு உத்தியோகத்தை பெற்று, சம்ரக்ஷணை செய்யத்தூண்டினார்கள். ஆதிமுதலிருந்து இவருக்கு கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் அமர வெறுப்படைந்திருந்தார். ஆயினும் சிலர் இவரை சீமைக்கு சென்று ஐ. ஸி. எஸ் முதலிய பரிக்ஷைகள் தேறி உயர்ந்த உத்தியோகம் அடையத் தூண்டுதல் செய்ய அதற்கிணங்கி சீமைபோனார். இவருக்கு ஐ ஸி. எஸ்

பரிக்ஷையில் போய்த் தேறுதலடைய எண்ணமேயில்லை. இருந்தாலும் பாரிஸ்டர் பரிக்ஷைக்குப் படிக்கலானார். இங்கிலாந்தில் இவர் ஆங்கிலேயர் அடைந்திருக்கும் சுயேச்சையைக் கண்டார். அத்தேசம் சொல்லவொணாத நிதிக்களஞ்சியமாயிருந்து வந்ததை நினைத்தார். அங்குள்ள வியாபாரச் சிறப்பும் உயர்ந்த நிலையையும் நோக்கினார். இந்தியாவின் ஸ்திதி யிவர் மனதிற் பட்டது. சுதந்தர வாழ்க்கை என்று சொல்ல லாயக்கில்லாமல் இருந்து வரும் இந்தியர்களின் நிலைமையை எண்ணினார். ஏன் இந்திய ஜனங்கள் ஆங்கிலேயர்களைப் போல் தனம் சேர்க்க முடியாது என்றும், வங்கதேசம் முற்காலத்தில் உலகத்திலுள்ள எல்லா மகுட மன்னர்களுக்கும் ஆடையாபரணம் கொடுத்து உதவியதுபோல இப்போது அந்நிலைமை யடையக்கூடாதென்றும் எண்ணினார். வியாபாரம் வர்த்தகம் ஏன் தனது தேசத்தில் விர்த்தியாகக்கூடாதென்று உசாவினார். உடனே ஆதியில் இந்தியாவின் நிலையையும் வங்கதேசத்தின் வியாபார வர்த்தகம் ஆதியில் இருந்த தன்மையையும் மனதில் நோக்கினார். எவ்வாறு இந்தியாவின் வியாபாரம் வர்த்தகம் கீழ் இந்தியா கம்பெனியெனப் பெயர்புனைந்து வர்த்தகப் பிழைப்புக்கு இந்தியாவுக்கு ஆங்கிலேயர் வந்தது முதல் நாளுக்கு நாள் குறைந்து குறைந்து கடாசியில் நசுக்கப்பட்ட முறைகள் மனதிற்கு வந்து புலப்பட்டன. உள்ளங்கசிந்தார். ஆராத்துயரமுண்டாயிற்று. தன்னுடன் இருந்த மற்ற மாணாக்கர்களுடன் இவ்விஷயங்களைப் பன்முறை எடுத்துச்சொல்லிச் சொல்லி மனந் தேறுதலடைவார். அம்மாணவர்களுடன் கூடி இந்திய விஷயங்களைப்பற்றி உபந்யாசம் செய்வார். சிற்சில ஆங்கிலேயர்கள் முழு சமாசாரங்களு மறியாமல் வாதாடுங் காலத்தில் இவர் தகுந்த உத்தரங்கள் சொல்லி ஆங்கில வியாஸங்களிலிருந்தே ஆதாரங்களெடுத்துக் காட்டுவார். இந்தியாவின் விஷயங்களையும் அதன் வறுமையையும் தாழ்ந்த நிலைமையையும் படித்து எக்காரணங்களால் இத்தகைய நிலைமை வந்ததென ஆராய்ச்சி செய்யவும் அதற்கு வேண்டிய உதவி செய்யஸாதனங்கள் அறியவும் கருத்துக் கொண்டு ஓர் சங்கம் அவ்விடத்தில் ஸ்தாபித்தார். (தொடரும்)

ஒருதமிழன்.



# நல்லினஞ் சேர்தல்.

"அரிதரிது மானிடராதலரிது"

*          *          *          *

"ஞானமுங் கல்வியும் நயத்தலரிது"

என நம் நரை மூதாட்டியார்க்கூறியபடி, இப்பூவுலகின்கண் நரஜென்மமெடுத்த நமக்கு பகுத்தறிவொன்றுகூட வுளது. அதனால் நாம் இது நல்லது, இது கெட்டது என்றறிந்து நன்மை தீமைகளை யுணர்ந்து, நல்வழியிற் செல்லவேண்டும். ஆதலால், "பாலுடன்சேர்ந்த நீரும் பாலாவது" போல, நாம் நல்ல இனத்தை உடையவர்களுடன் பழகல் வேண்டும் அங்ஙனம் பழக, நமக்கு "கல்வி" கற்பது அவசியம் ஆதலால் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற்சிறந்த "நல்லினத்தாருடன் சேர்வதே," நல்லினஞ் சேர்தலாகும்.

மற்றும், நாம் நன்மார்க்கத்தாருடன் சேர்ந்தால் நம்மிடம் உள்ள துன்மார்க்கம் கெடும் என்பதை

அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு"—என கூறுகிறார். (நாலடியார்.)

இதன் பொருளாவது "வெயிலைக்கண்டு பனிநீங்கினாற் போல துன்மார்க்கரைச் சேர்ந்த துர்நடக்கை நன்மார்க்கரைச் சேரக் கெடும்" என்பதாம். ஆதலால் நாம் நல்லினத்தாரோடு பயின்றால் அவர்களிடமிருந்து முத்திக்கு வழியைப்பெறலாம்.

"முத்திக்கு வித்தாகு முழுதுணர்ந்தோர் பெருநட்பே
இத்திக்கு நாடோறுந் தேவர் பெறற் கருள்திருவுஞ்
சித்திக்கும் படியருளுஞ் செப்பரிதால்."

என்றதால் நல்லவர் நட்பை யார்தான் மறுப்பர்? மற்றும் ஒருவர் நல்லோர் நட்பை நாடியதால்,

"தெருண்டமேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்டதன்மையை மாற்றுவர்எனுமிது வழக்கே" (கம்பர்)

என்றபடி சிறோராயினும் அந்நல்லோர் அவரைத் தம்மைப்போற் கல்வி, கேள்வி பொழுக்கங்களிற் சிறப்புடையவராகச் செய்வார் என்பது திண்ணம். மற்றும் நாம்.

அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற்—றொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்சு. (நாலடியார்.)

என்றபடி, "பெரியோரை (அறிவுடையோரை.) என் மனம் பிணிக்கக்கடவது என்றிருக்கவேண்டும்.

நாம் நல்லவர்களோடு சிநேகஞ்செய்தால், அவர் நம்மை விட்டுப் பிரிந்தொங்கிருந்தாலும் நம்மீது வைத்த அன்பை மறவார்கள். இன்னும்,

"ஆயின் மறைமுதற் கலைகளனைத்து முணர்ந்தற மறம்பாத்
தேயினிது நன்றிது தீதென்றுணர்த்து மவர்நட்பை
வீயினுந்தா மறப்பர்களோ மேதையோர் மறப்பரே
ரூயினுங் கீழ்ப்பட்டவர் களவர் காணிந்நானிலத்தே"

"சமயம் வரினிடித்துரைப்பார் தக்கவழிச் செலச்செய்வார்
இமையவர்த முலகுறவு மிருளுலகம் பகையுமா
யமையவறி வுறுத்துவாரந்தோ நூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கும் அரிதரிது"

என்றபடி சமயா சமயத்தில் நற்புத்தி போதித்து உபசரித்து தீயவர் தீங்கு செய்பவரின், அவர்களை நசித்துக்காப்பார். இப்பேர்க்கொத்த நல்லினஞ் சேர்தலை மறுப்பவர் யாவர்?

பிறப்புத்துன்ப மாயினும் பெரியோரைச் சிநேகித்தால் அப்பிறப்பை வெறுக்கார் என்பதை,

இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்
பிறப்பினை யாருமுனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்று
நண்பாற்றி நட்கப் பெறின்" (நாலடியார்)

என்று சமண முனிவர்களும் கூறுகின்றனர்.

அம்மட்டோ? சலதாரைநீர், பெருவெள்ளத்தைச்சேர்ந்து தீர்த்தமாகும். அதுபோல உயர்ந்தோரைச் சேர்ந்த தாழ்ந்தோரும் உயர்ந்தோராவர்,



"ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து" (நாலடியார்)

என்றுங் கூறுகின்றார். அதுவுமல்லாது சமண முனிவர்கள்,

"ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ்சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மைகொளின்" (நாலடியார்)

என்றுங் கூறுகின்றார்கள்.

அஃதாவது, வானத்தில் வெண்மதியமிருக்கின்றது. அஃதுடன் சேர்ந்த களங்கமுந் தொழப்படுகிறது. அதுபோல பெரியாரைச்சேர்ந்த சிறியோருஞ் சிறப்படைவர் என்பதாம்.

ஆதலால் இம்மாதிரி சிறப்புடைய நல்லினத்தாரோடு சேரயாரேனும் மறுப்பரோ எங்குமவரே புகழப்படுகின்றனர். காந்தியடிகளுடன் சேர்ந்து பிரசங்கம் செய்யும் சாதாரண மனிதரும் புகழப்படுவதை நாம் சாக்ஷாத்தாய்க் காணவில்லையோ? அன்னவரே நல்லினத்தார். பாலாகிய காந்தியடிகளுடன் பகரும் நீராகிய நாம் சேர்ந்தால் நாமும் பாலெனப் படுவோம். இதை,

பாலோ டளாயநீர் பாலாகுமல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்-தேரிற்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து" (நாலடியார்)

எனவறியலாம்.

மற்றும் மரக்கட்டையைச் சார்ந்த புல்கலப்பைக் கசையாது போல வலியாரைச்சார்ந்த மெலியாரிடத்துப் பகைவர் கோபஞ் செல்லாது, என்பதை,

"கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல்
ஒல்காவே யாகு முழவ ருழுபடைக்கு
மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாஞ் செற்றார் சினம்" (நாலடியார்)

என்று சமணமுனிவர்கள் சிறப்பித்தன்னவர் பெருமையை ஒருவாறு மேற்கூறியபாக்களாலும், தீயினத்தோடு நல்லினஞ் சேர்ந்தால்,

"நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
குலநலத்தா லாகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்கு சான்றாண்மை
தீயினஞ் சேரக்கெடும்" (நாலடியார்)

என்றபடி கடுங்காற்றுக்கப்பலைக் கெடுத்தாற்போல் கெட்டுவிடும்.

ஆதலால் சகோதர சகோதரிகளே! தீயினத்தாருடன் சேர்ந்து அவர்களது தீப்பழக்கத்தைக் கொள்ளாது அன்னவர்களைத் திருத்த முயலுங்கள்.

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்" (குறள்)
"தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை" (குறள்)

எல்லாம் வல்ல ஈசன் நம்மைக்காத்து நாம் நல்லினமடைய "பைந்தமிழ்" உதவியால் அவன் பாதாரவிந்தமடைவோமாக.

சுபம்!

ச. பஞ்சாபகேச அய்யர்,
காரியதரிசி
"சச்சிதானந்த நிலையம்"
கச்சேரிரோட், மாயவரம்.

## ஸ்த்ரீகளுக்கான பக்கம்.

(48-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒரு மாது எழுதியது.

சகோதரியே !

நீ இப்போது இல்லறம் நடத்துவதைப்பற்றிக் கூறவேண்டியது முக்கியம். விவாகம் என்றால் என்னவென்று சற்று யோஜித்துப் பார். அவ்விவாகச் சடங்குதினம் நீயும் உன்பதியும் சேர்ந்து அன்னியோன்யமாய் இன்பத்திலும் துன்பத்திலும் ஒத்துவாழ்வதான விரதத்தைக் கைக்கொண்டாயல்லவா? உன்பதி உனக்குக்காட்ட



வானத்திலுள்ள அருந்ததியை நீ பார்த்து அவளைப்போல உன் ஆயிசுபரியந்தம் கணவனுக்குவேண்டிய நன்மையைச்செய்து அடக்கத்துடன் அவனுடன் ஒருமனப்பட்டிருப்பதாய் சத்தியம் செய்தாயன்றோ? இவ்விரதத்தை சத்தியத்துடன் அனுஷ்டித்தால் உனக்கும் உன்பதிக்கும் உனது குடும்பத்துக்கும் இகபர சாதனமடைய முக்கியகாரணமாகும். நீ கணவனுடன் இருந்துவருவது எல்லா தர்மத்துக்கும் உயர்ந்தது. உலகத்தில் தர்மம் என்பது இருவகைப்படும். இல்லறம் துறவறம் எனப்படும். இல்லறம் என்பது ஒருவனும் ஒருவளும் ஐக்கியபாவத்துடன் அதாவது அந்நியோந்யத்துடன் ஒருவர் மற்றொருவருக்கு வாழ்க்கைத் துணையாயிருந்து வருதலே. இவ்வாறு ஒருவரையொருவர்பிரியாது கணவனும் மனைவியும் ஒருங்கு இருந்து சிறந்துவாழ்வதுதான் எல்லா வாழ்க்கைக்கும் உயர்ந்ததென்று காட்டுவதற்கே சிவன் பார்வதி சமேதனாகவும், விஷ்ணு லக்ஷ்மி சமேதனாகவும், பிரம்மா சரஸ்வதி சமேதனாகவும் இருந்து பூஜிக்கப்படுகிறார்கள். இவ்வுலகில் பிரிந்து இருக்கக்கூடாது என்பதை காட்டுவதற்கே நமது பெரியவர்கள் சிவன் தனது பாதிதேகத்தை உமையவளுக்கு கொடுத்ததாயும், விஷ்ணு தனது மார்பிலே லக்ஷ்மியைவைத்துக் கொண்டிருப்பதாயும், பிரம்மா தனது நாக்கில் ஸரஸ்வதியை வைத்திருப்பதாயும் கூறுகிறார்கள். இவ்வாறான இல்லறம் துறவறத்தைவிட மிகசிலாக்கியமானது. இந்தவிஷயத்தைக் காட்டுவதற்காகத்தான் வேதப்பொருள்களைத் தமிழில் எழுதி உலகுக்குதவிய திருவள்ளுவ நாயனாரும் அறத்தைப்பற்றிக்கூறும்போது இல்லறத்தை முதன்மையாகச் சொல்லுகிறார்.

துறவறமாவது உலகத்தில் மானிட இச்சைக்குக் காரணமான பொருள்களிடத்தில் லக்ஷியம் வைக்காமல் துறந்து பரமபுருஷனை கடவுளை த்யானம் செய்து மறுமைச்சுகத்தைத்தேடுதலே.

இவ்வில்லறதர்மத்தை நடத்தும் சகோதரியே, மேற்சொன்ன திருவள்ளுவநாயனார் ஒரு மனைவியினது குணத்தைக் கூறியதை சுருக்கிச்சொல்லுகிறேன், கேட்பாயாக. கணவனுடைய வருமானத்துக்குத் தக்கபடி செலவழித்து அவனுக்கு வாழ்க்கைத்துணை

வியாயிருக்கவேண்டும். கற்பென்னும் மாட்சிமையிருப்பின் வீட்டில் லக்ஷ்மி கடாட்சம் இருக்கும் மனைவிக்கு தெய்வம் தனது கொழுநனே என்று எண்ணி செய்யும் சகோதரி பெய்யென்று சொல்லு முன்னம் மழையும்பெய்யும். தனது ஆசாரத்தை காப்பாற்றி தனது கணவனது சௌகரியங்களைப்பேணி தனது இல்லத்தை செவ்வி தாய்ச் செய்பவளே இல்லாள்.

மனைவிதன் நிறையைகாத்துக்கொண்டால் தேவர்கள்கூட அடையாத ஆனந்தத்தை உலகுக்குகொடுப்பவளாவள். இப்படிச் செய்தலே மங்கலமென்பது. இவ்வாறானதம்பதிக்குப் பிறக்கும் மக்கள் இவ்வுலகத்துக்கே ஆபரணங்களாகும்.

இவ்வாறுகூறிய குணங்களுடைய பெண்மணிகள் சரித்திரங்களிற்சில எடுத்துக்கூறிப் பின்னும் எழுதுவேன்.

(தொடரும்)

---

# அதிசயக்கணக்கு.

(42-ம் பக்கத்தொடர்ச்சி)

நண்பர்கள்! கீழ்க்கண்டுள்ள அதிசயக்கணக்குகளை வழியுடனும் ஒப்பனையுடனும் (Proof) போட்டு நமது நன்றியுள்ள 'ஞானமே' அவதாரமான "பைந்தமிழ்" மூலமாக அடுத்த சஞ்சிகையில் வெளியிடவும்.

கட்டம்.

1.

| | |
|---|---|
| க | கா |
| கி | கீ |

இந்நான்கு கட்டங்களை, அதாவது, (க + கா + கி + கீ) கூட்டினால் வரும் மொத்தத் தொகை 100. அவைகளில் (க + கா = 30) (கா + கி = 50) (கி + கீ = 70) (கா = இரட்டிப்பு க) (கி = முப்பங்கு க) (கீ = நாற்பங்கு க.) இந்த கட்டங்களிலமைய வேண்டிய எண்கள் யாவை?

ப. சு.



(2) ஒரு வீசைக்கு பலம் 40. அவைகளை நான்கு பலக்கற்களால் அளந்து கொடுக்கவேண்டியது. அந்த பலக்கற்களைக் கொண்டு 1 பலம் கேட்டாலும் சரி, 20 பலம் கேட்டாலும் சரி, 39 பலம் கேட்டாலும் சரி, 40 பலம் கேட்டாலும் சரி, மற்ற எவ்வளவு பலம் 40-க்குள் கேட்டாலும் சரி கொடுக்கவேண்டியது. ஒவ்வொரு பலக்கல்லும் எவ்வளவுபலம் கொண்டது?

ச. ப.

(3) ஒரு குதிரை ஒரு நாளுக்கு 10 மைல் வீதம் செல்கிறது. அதன் குட்டி முதல்நாளில் ஒருமைலும், 2-ம்நாளில் 2-மைலும் என்று அந்தந்த நாட்களில் அவ்வவ்விதமாக செல்லுமாயின் எத்தனைநாட்களில் தாயை அடையும்.

கோ. ச.

குறிப்பு:—நமது சந்தாதார்கள் இந்தக்கணக்குகளின் வழியைத்தெளிவாயும் சுத்தமாயும் எழுதி விடைகளை மாசிமீ 25 தேதிக்குள் அனுப்பவேணும். 3 கணக்குகளுக்கும் சரியான விடை கொடுப்பவர்களுக்கு 8 அணா விலையுள்ள தமிழ் புத்தகங்கள் பரிசளிக்கப்படும்.

பத்திரிகாசிரியர்.

---

# பிரகிருதி ஆராய்ச்சி விளக்கம்.

(23-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சூரிய மண்டலத்தின் விசேஷம்.

இச்சூரிய மண்டலத்தை நாம் வெகு கவனமாய்ப்பார்த்தால் பல விஷயங்களையறிகிறோம். அம்மண்டலத்திலுள்ள வஸ்துக்களெல்லாம் அசைந்து சுற்றிவருகின்றனவென்பதையும் அவ்வாறு சுற்றுவனவெல்லாம் ஒரேவிதமாகவும் ஒரு பக்கமாகவும் தான் சுற்றிவருகின்றனவென்பதையும் அறிகிறோம். அதையே தெளிவாக உரைப்போம். சூரியனும் பூமியும் மற்றுமுள்ள உலகங்களும் பம்பரம் சுற்றிவருவதுபோல ஒரு அச்சாணிமேல் நின்று சுற்றுகின்றன.

இன்னும், அம்மண்டலத்திலுள்ள உலகங்கள்யாவும் தன்னை தன்னைச்சுற்றிகொள்வதுடன் சூரியனையும் சுற்றிவருவதை யறிகிறோம்.

இன்னும், சூரியனும், அதை சுற்றிவரும் உலகங்களும் ஒரே விதமாய் உள்ளவஸ்துவால் உண்டாக்கப்பட்டதாயு மறிகிறோம். அதாவது சூரியன் எந்த வஸ்துக்களைத்தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கிறதோ அவைகளையே அச்சூரியமண்டலத்திலுள்ள மற்ற சுற்றும் பொருட்களிடத்திலும் இருப்பனவாகத் தெரிகின்றன.

இன்னும் ஒவ்வொரு உலகமும் சூரியனைச்சுற்றிவருவதாயும் தன்னைத்தன்னையும் சுற்றிக்கொண்டும் இருப்பதாகவும் சொன்னோம். இதையே தெளிவாய் உதாரண மூலம் கூறுவோம்:—

சூரியன் என்னும் ஒரு விளக்கை மேஜைமேல் நடுவில் வைத்திருப்பதாய் எண்ணுவோம். ஒரு பம்பரம் அதைச்சுற்றிவரும்படியாக செய்வோம். பம்பரம் தன்னைச் சுற்றிவருவது தெளிவாய் உங்களுக்கு தெரியும். அவ்வாறு தன்னைச்சுற்றிக்கொண்டே சூரியனை விளக்கையும் அப்பிரதக்ஷணமாய் (anticlockwise) சுற்றிவருகிறது. அப்போது அப்பம்பரம் தன்னையும் சுற்றிவருகிறது. அதுபோலவே சூரியனைச் சுற்றிவரும் எல்லா உலகங்களும் தன்னைச் சுற்றிக்கொள்ளுகின்றன.

இம்மண்டலத்தில் எல்லா உலகங்களும் சூரியனைச்சுற்றிவருவதில் வேறு விசேஷமுண்டு. அதாவது:—

ஒரு கல்லைதூக்கி மேலே எறிந்தால் என்ன உண்டாகிறது? கல்லானது உயர சிறிதுதூரம் சென்றபின் மறுபடியும் கீழே பூமியில் விழுகிறது. அதன் காரணம் என்னவென்றால் பூமியின் ஆகர்ஷணம் (gravitation) என்னும் சக்தியால் தன்னிடமுள்ள ஒரு பொருளை வேறு இடம் செல்லாமல் இழுக்கும் சக்தியே. அதுபோல சூரியன் மற்ற உலகங்களை தன்னிடம் இழுத்துக்கொண்டிருக்கிறது. அதுபோலவே உலகங்களும் ஒவ்வொன்றை இழுத்துக்கொண்டிருக்கின்றன. இதையே பின்னால் விரிவாய்ச்சொல்லுவோம்.

(தொடரும்)

K. ஜகதீசன் பி. ஏ.



# "பைந்தமிழ்" பஞ்சாங்கம்.

(All rights Reserved.)

துந்துபிஸு பங்குனிமீ சாலிவாகனஸு 1845, கலியுக-5024, இங்கிலீஷ் 1923, மார்ச்சுமீ ஏப்ரல்மீ, பஸலி 1332, ஹிஜரி 1341.

| மார்ச்சு மாதம் | பங்குனி மாதம் | கிழமை | திதி | | நக்ஷத்திரம் | | யோகம் | | புண்யகாலம் விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | புத | துவி | 15-38 | திரு | 11-53 | சிவ | 26-45 | மீனரவி நா-10-55 ஷடசீதி புண்ணிய [காலம் சம்பத் கௌரி விரதம். |
| 15 | 2 | வியா | திரி | 19-35 | அவி | 17-5 | சித் | 27-15 | நாமகரணம், வித்தியாரம்பம் செய்ய. |
| 16 | 3 | வெள் | சது | 24-35 | சதை | 23-13 | சாத் | 28-25 | போதாயன அமாவாசை. |
| 17 | 4 | சனி | ● | 30-5 | பூரட் | 30-10 | சுப | 30-15 | அமாவாசை. [சைத்ர சுத்தம். |
| 18 | 5 | ஞாயி | பிர | 36-23 | உத் | 37-38 | சுப் | 32-27 | யுகாதிபண்டிகை, சித்திக்கணபதி விரதம், |
| 19 | 6 | திங் | துதி | 42-55 | ரேவ | 45-23 | பிர | 34-55 | கரிநாள். |
| 20 | 7 | செவ் | திரி | 49-33 | அசு | 53-8 | ஐந் | 37-27 | ஆண்டோளன் திரிதிகை, மச்சஜயந்தி. |
| 21 | 8 | புத | சது | 55-48 | பர | 60-0 | வை | 39-47 | மேஷாயனம் நா-36-48. |
| 22 | 9 | வியா | பஞ் | 60-0 | பர | 0-38 | விஷ் | 41-40 | கிருத்திகை, கிருதின ஸ்பிருக், லக்ஷ்மி |
| 23 | 10 | வெள் | பஞ் | 1-23 | கிரு | 7-23 | பிரீ | 42-50 | சஷ்டி. [பஞ்சமி. |
| 34 | 11 | சனி | சஷ் | 5-50 | ரோ | 13-5 | ஆயு | 42-47 | கங்கோற்பத்தி. |
| 25 | 12 | ஞாயி | சப் | 8-53 | மரு | 17-43 | சவு | 41-43 | ............ |
| 26 | 13 | திங் | அஷ் | 10-10 | திரு | 19-55 | சோ | 38-53 | ஸ்ரீராமஜயந்தி, ஸ்ரீராமநவமி, பவாண் |
| 27 | 14 | செவ் | நவ | 9-30 | புன | 20-38 | அதி | 35-28 | தர்மராஜாதசமி. [உற்பத்தி. |

| மார்ச்சு மாதம். | பங்குனி மாதம். | கிழமை | திதி. | | நக்ஷத்திரம். | | யோகம். | | புண்யகாலம் விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28 | 15 | புத | தச | 6-55 | பூச | 19-23 | சுக | 29-57 | சரிநாள், ஸ்மார்த்த ஏகாதசி. |
| 29 | 16 | வியா | ஏகா | 2-3 | ஆயி | 16-20 | திரு | 22-55 | வைஷ்ணவ ஏகாதசி, மத்வ ஏகாதசி, வாமன |
| | | | துவா | 56-25 | | | | | துவாதசி [பூஜாவிரதம். |
| 30 | 17 | வெள் | திர | 48-55 | மக | 11-43 | சூல | 14-35 | பிரதோஷம், சமனத்ரயோதசி, அனங்க |
| 31 | 18 | சனி | சது | 40-25 | பூர | 5-48 | கண் | 5-13 | பங்குனி உத்திரம், இரவில் தனிய நாள். |
| | | | | | உத் | 58-53 | விரு | 55-5 | சரிநாள், பகலிற் தனிய நாள். |
| 1 | 19 | ஞாயி | ○பௌ | 31-18 | அஸ் | 51-30 | துரு | 44-37 | சைத்திரபகுளம் |
| 2 | 20 | திங் | பிர | 21-50 | சித் | 44-5 | வியா | 54-0 | மாதுவாக்க, வாகனமேரு. |
| 3 | 21 | செவ் | துதி | 12-38 | சுவா | 37-0 | அரி | 23-35 | ஆடதம் பமிற்ற, ஆபரணம்பூண. |
| 4 | 22 | புத | திரி | 4-3 | விசா | 30-45 | வச் | 13-50 | |
| | | | சது | 56-25 | | | | | |
| 5 | 23 | வியா | பஞ் | 50-10 | அநு | 25-13 | சித் | 5-0 | |
| | | | | | | | விதி | 57-15 | |
| 6 | 24 | வெள் | சஷ் | 45-35 | கே | 22-18 | வரி | 50-53 | |
| 7 | 25 | சனி | சப் | 42-48 | மூல | 20-33 | பரி | 46-0 | |
| 8 | 26 | ஞாயி | அஷ் | 42-3 | பூரா | 20-0 | சிவ | 42-45 | |
| 9 | 27 | திங் | நவ | 43-10 | உத் | 22-53 | சித் | 40-53 | |
| 10 | 28 | செவ் | தச | 46-8 | திரு | 26-45 | சாத் | 40-28 | |
| 11 | 29 | புத | ஏகா | 50-25 | அவி | 32-8 | சுப | 41-10 | சர்வ ஏகாதசி, மத்வ ஏகாதசி. |
| 12 | 30 | வியா | துவா | 55-50 | சத | 38-38 | சுப் | 41-43 | தானியம், மாடு முதலானவை வாங்க. |

| | | | |
|---|---|---|---|
| ஞாயி | செவ் | | |
| கே / புத | [illegible] | | |
| சுக் | | | ராகு |
| | | குரு | சனி |

[ஜயந்தி வாரக

[திர்க்க டடன

PRINTED BY SOLDEN AND CO., FOR K. JAGADISAN B.A. EDITOR AND PUBLISHER, MADRAS.

(ச. ப.)

# அறிவிப்பு.

## சந்தா நேயர்கள் அவசியம் கவனிக்கவும்!

1. சந்தாதாரர்கள் தங்களுக்கு வரும் சஞ்சிகையில் விலாசத்தின் வலப்பக்கத்து மேற்கோடியில் குறிப்பிட்டிருக்கும் சந்தா நெம்பரை அவசியம் குறித்துக்கொள்ளவும். (ரிஜிஸ்டர் நம்பரல்ல.)
2. விஷயதானம்புரியும் நண்பர்கள் தாங்கள் அனுப்பும் விஷயத்தை சுத்தமான காகிதத்தில் ஒரு ஷீட்டில் (கால் பேபர் கூடாது) ஒருபக்கத்தில் தெளிவாய் எளிய நடையில் எழுதவேண்டும். விஷயம் மூன்று பேபர்களுக்குக் குறையாதிருக்கவேண்டும். அவை பொது நலமாயும் ராஜாங்கத்திற்கு விரோதமில்லாதவைகளாயுமிருக்கவேண்டும். அவைகள் சொந்தமாயும், வேறு துண்டுகளிலிருந்து எடுத்து எழுதினல் இன்னவற்றிலிருந்து எடுத்து எழுதபட்டது, என்றும் எழுதவேண்டும். அவசியம் அவைகள் பிரசுரம் செய்யப்படும்.
3. சந்தாதாரர்கள், சந்தா தொகையை அனுப்பும்பொழுது தங்களது பூரணவிலாசத்தையும் விஷய தானம்புரியும் நண்பர்கள் தங்கள் வியாசத்தினடியில் தங்களது பூரண விலாசத்தையும் எழுதி யெங்களுக்கறிவிக்க வேண்டும்.
4. சந்தா நேயர்கள் தாங்கள் எழுதும் கடிதங்களில் தங்களது சந்தா நெம்பரை குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.
5. மத்தியில் சந்தாதாரராகச் சேருபவர்கள் தங்கள், தொகையை மணியார்டர் செய்துவிடவேண்டும். அவர்கள் கூபனில் தங்கள் விலாசத்தை பூரணமாயெழுதி "நாம் ஒரு புதிய நபர்" எனவும் வரையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.
6. மத்தியில் சேரும் சந்தாதாரர்கட்கு, அவ்வருட ஜனவரிமீ முதற்கணக்கிடப்பட்டே சஞ்சிகை யனுப்பப்படும். அவர்களுக்கு அதுவரையில் வெளிவந்துள்ள சஞ்சிகைகள் சேர்த்து அனுப்பிவிடப்படும்.
7. சேர்ந்தாற்போல் 5 புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கும் சந்தா நேயருக்கு ஒரு ரூபாய் விலையுள்ள நாவல் இனமாக அனுப்பப்படும். அங்ஙனம் சேர்ப்பவர் அவ்வைவரையும் தவிர வேறு ஒருவராயிருக்கவேண்டும்.

# பைந்தமிழ்

## (ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

அரிய தமிழில் வெகு நல்ல நடையுடனும் சுவையுடனும், எழுதப்பட்ட பல முக்கியமானதும் கல்வி யூட்டக்கூடியதுமான விஷயங்கள் நிறைந்துள்ளது. பல பிரபல வித்வான்களும் பண்டிதர்களும் எழுதும் விஷயங்களுள்ளது. தமிழ் நாட்டு ஆண் பெண்களுக்கு முற்றிலும் அறிவு ஊட்டுவது. தமிழபிமானிகளின் வரவேற்புக்குமுற்றிலும் பாத்திரமானது.

உயர்ந்த காயிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டது. ஒவ்வொரு இல்லந் தோறும் அடையுமாறு சந்தாவும் வெகு குறைவாக ஏற்படுத்தியிருக்கிறோம்.

---

### சந்தா விகிதம்.

| | ரூ | அ. |
|---|---|---|
| ஜீவிய சந்தா. இந்தியா பர்மா ஸிலோன் தேசங்களுக்கு ... | 25 | 0 |
| அன்னிய தேசங்களுக்கு ... ... | 35 | 0 |
| வருஷசந்தா இந்தியா பர்மா ஸிலோன் ... ... | 2 | 8 |
| அன்னிய நாடுகளுக்கு ... ... ... | 3 | 12 |
| தனிச்சஞ்சிகை விலை ... ... ... | 0 | 4 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்தசந்தா கிடையாது. ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகள் சந்தாதாரர்கள் சேர்ப்பதற்குத்தேவை. மற்ற விபரம் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

வியாபார, விளம்பரத்துக்கு வெகு உரித்தாயது.

---

### விளம்பர விகிதம்.

| | ரூ | அ. |
|---|---|---|
| ஒருபக்கத்துக்கு ஒருமாதம் ... ... ... | 7 | 0 |
| அரைப்பக்கத்துக்கு, ௸ ... ... ... | 4 | 0 |

அரைப் பக்கத்துக்குக் குறைந்த விளம்பர பிரசுரம் ஏற்றுக்கொள்ளத் தகாது. எப்போதும் பாதித்தொகையை முன் பணமாய் அனுப்பவேண்டும். மற்ற பாதியை வி. பி. மூலமாய் வசூலிக்கப்படும்.

மாதிரி காப்பி இரண்டணா தபால், ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு அனுப்பப்படும்.

திருவல்லிக்கேணி
சென்னை.

மானேஜர்
"பைந்தமிழ்" ஆபீசு.

PUBLISHED BY K. JAGADISAN B.A., EDITOR, MADRAS.

Printed by Solden & Co., Madras. S.E.

14020

# அத்திரியின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

## குணமில்லாவிடில் விலையை வாப்ஸ் செய்யப்படும்.

இம்மருந்துகள் கல்குத்தாவில் டாக்டர் குப்தாவால் தயாரிக்கப் பட்டன.

(1) "அற்புதமெழுகு" எவ்வகை மூலம், சொறிகள், பௌத்ராம், கட்டிகள், மேகப்பத்துகள், கெட்டசீக்கினால் உண்டான புண்கள், ரணங்கள் வகைபருவை ஆப்ரேஷன் இல்லாமலே ஸ்வஸ்தமாக்கும் புட்டி 1-க்கு விலை ரூ. 1-12-0.

(2) "அமிர்த டானிக்" ஆண், பெண் வாலிபர், வயோதிகர் யாவரும் உபயோகிக்கலாம், இரத்தக்குறைவு, அசுத்த ரத்தம், பலகீனம், கை கால் அசதி, தேகமெலிவு, நீர்த்தாரை எரிச்சல், தாது புஷ்டிக்குறைவு, அஜீரணம், மலச்சிக்கல், பித்தகுன்மம், பித்தவாயு, ஞாபகசக்தியின்மை, முதலிய வியாதிகளைக் கண்டித்து, நரம்புகளுக்கு வலுவை கொடுத்து, தாது புஷ்டியளித்து இரத்த விர்த்தியையுண்டாகும். 8 அவுன்ஸ் பெரிய புட்டி 1-க்கு ரூ. 1-12-0.

(3) "படைஸம்ஹாரி" எவ்வகை படைகள், அரைகடிகள், சொறிகள், படர்தாமரை, முதலியவைகளை கண்டிக்கும். புட்டி 1-க்கு விலை அணு 6.

(4) "காது தைலம்" காதுவலி, குத்து, சீழ்வருதல், காதடைப்பு முதலியவைகளை கண்டிக்கும். புட்டி 1-க்கு அணு 10.

(5) "லைலவிலாஸ்" ஹேராயில். மூளைக்கொதிப்பை யடக்கி குளிர்ச்சி செய்து தலை முடிக்கும் அழகு அளிக்கும் ஆனந்தவாஸனையுள்ளது புட்டி 1-க்கு விலை ரூ. 1-0-0.

(6) 'அத்ரி பல்பொடி' சாக்கட்டி இதில் சேர்க்கப்படவில்லை. மருந்து மூலிகைகளும் கருவேலம் பட்டை, கல்நார், முதலிய மருந்து சரக்குகளுமே உபயோகிக்கப் பட்டுள்ளது. இதை உபயோகித்தால் பல் வெளுப்பாவதுடன், வாய் நாற்றம், பல் வலி, ரத்தம் வருதல், முதலியவைகளை நிறுத்தி பல்லுக்கு பலத்தை புண்டாக்கும். டப்பி 1-க்கு அணு 3.

K. ஜகதீசன் கம்பெனி,
திருவல்லிக்கேணி,
சென்னை.